1135
வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை [11

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# 'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது
1937-ஞ் நவம்பர்-மீ [கார்த்திகை-மீ

18913

பலவாரும். கலியைப் போக்கி உலகினை அளிக்கவே வந்தவதரித்தான் பகவான். அவ்வாறே செய்தருளினர் இவ்வாழ்வாரும். கல்கியவதாரம் பகவானுடைய கடைசி அவதாரமானதுபோல ஆழ்வார்களான தசாவதாரங்களுள் இக்கலியனே கடைசியவதாரமானர். பகவானைப்போலவே நீலமேகத்தையொத்த திருநிறத்தைப் பெற்றதால் 'நீலன்' என்னும் திருநாமத்தையும், "கைம்மாறு வேண்டா கடப்பாடு, மாரிக்கண் என்னாற்றுங்கொல்லோ வுலகு" என்றவாறு ப்ரத்யுபகாரம் ஒன்றையும் எதிர்பாராது தமது அருள்மாரியை வர்ஷித்து 'அருள்மாரி' என்ற திருநாமத்தையும் பெற்றார். பகவான் அர்ஜுனனுடைய தேர்த்தட்டின் மேல் நின்றுகொண்டு முன் கீதையைப்பாடிய கவியானதுபோல், செங்கெல்கழனிக்குறையல் கலைப்பெருமானும்அறிவுதரும் பெரிய திருமொழி முதலிய ஒலிமிக்க பாடல்களைப் பாடி, நாலுகவிப் பெருமாளானார். பகவான் உலகத்தின்புறவிருளைப்போக்கும் பன்னிரு ஆதித்யர்களில் ஒருவரேயானார். ஆழ்வாரோ இறைவனைக் காணும்படியக் திருள் கெடுத்து ஞானமென்னும் நிறைவொளியைத் தரும் லோகதிவாகரனாயிருக்கிறார். இவ்வாறு பலவிதத்திலும் எம்பெருமானை ஒத்திருக்கும் இவ்வாழ்வாருக்கு "சதுர்ணாம் ஸர்வஷாஸ்த்ராணாம் ஷோபாவா சதுர்புஜ:" என்றபடி எம்பெருமானுக்கு வாய்த்த சதுர்புஜங்கள்போல் நான்கு மந்திரிகளும் வாய்த்தார்கள். இவ்வர்த்தங்களையெல்லாம்கணிசித்தே

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம் ।
யஸ்ய கோபி: ப்ரகாசாபி: ஆவித்யம் நிஹதம் தம: ॥

என்று பெரியோர்கள் அநுஸந்தித்துப் போந்தார்கள்.

நம்பிள்ளை அவதாரதினம்— கார்த்திகைமீ 3௳. திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறுயிரப்படி வ்யாக்யானம் செய்தருளிய வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு இவரே ஆசார்யன்.

திருக்கார்த்திகை— கார்த்திகைமீ 3௳.

லால்ஜி ...வதாரதினம்— கார்த்திகைமீ 4௳. ஆழ்வார்கள் பதின்மரிலும் ஸ்ரீதேசிகனுக்குத் திருப்பாணாழ்வாரிடமே ஈடுபாடு மிகவும் அதிகம் என்பது அனைவரும் அறிந்ததே. அதிகாரஸங்க்ரஹப் பாசுரத்தில் மற்றைய ஆழ்வார்கள் பக்கல் இல்லாத ஓர் உரிமையை ஏற்படுத்திக்கொண்டு 'நம் பாணநாதன்' என்று



அருளிச்செய்ததும், ப்ரபந்தஸாரத்தில் இவ்வாழ்வார் அவதாரம் செய்த மாஸத்தின் பெருமையை "உலகறிய மலிபுகழ்க் கார்த்திகைமாதத்தில்" என்று கொண்டாடியதும், இவர் அருளிச்செய்த 'அமலனாதிபிரான்' என்னும் பிரபந்தத்துக்கு 'முனிவாஹனபோகம்' என்னும் அரியதோர் வ்யாக்யானமிட்டதும், கண்டவர்சிந்தைகவரும்கடிபொழில்தென்னரங்கனை இவர்முன்புபாதாதிகேசமாய் அனுபவித்ததுபோலவே தாமும் அனுபவித்து, இவ்வனுபவத்தின் பரீவாஹமாக ஸ்ரீபகவத்யான ஸோபானத்தை அருளிச்செய்ததும் இவ்வாழ்வாரிடம் ஸ்வாமிக்குள்ள ஈடுபாட்டைச் சற்றுமொளியாது எடுத்துக்காட்டும்.

இவ்வாறு பாண்பெருமாள்பக்கல் ஸ்வாமி தேசிகன் மிகவும் ஆதரங்காட்டுவதற்குத்தகுந்த காரணங்களுமுண்டு. பாணராவார் யாழ்கைக்கொண்டு அரசர்கள் ப்ரபுக்கள் முதலியோரைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்துவரும் ஒருவகைச் சாதியினராகவும் இவர்கள் ஒரு நாயகனுடைய குணங்களை அவனது நாயகியின் முன் பாட, இக்குணங்களில் ஈடுபட்ட நாயகி தலைவன்பாற்கொண்டுள்ள சினந் தணிந்து, தனது ஊடல் நீங்குவாளென்றும் கூறுவர். இன்னனமாயின் நம் பாணநாதனும் இத்தகைய ஓர் பாணரே. இவர் பாடுவது நம்பெருமாளுடைய பெருமைகளையாம். நம்பெருமாள், தாம் "ஜகத்ஸர்வம் லோகஸ்ய ஸர்வஸ்ய நாத:" என்றும், "லோகநாத: ஸ்ரீ ஸேவ்ய:" என்றும் சொல்லுகிறபடி லோகங்களுக்கெல்லாம் பர்த்தாவும் நாதனுமாக இருப்பினும், 'ஸ்வீயாயதி தாஸ: ஜந:' என்றபடி சேதனவர்க்கங்கள் அனைத்தும் தம்முடன்கூடி இன்பத்தை நுகரவேண்டிய ஸ்த்ரீகள்போலிருப்பினும், இச்சேதனவர்க்கங்கள் 'பிதா மாதா ச ஸுத: ச பந்து: ஸர்வம் நாராயண:' என்றும், 'த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ' என்றும் தம் பக்கல் வர்த்திப்பதை விட்டு ஸம்ஸாரத்தில் கிடந்துழலுவதைக் கண்டு எவ்வாறுயினும் இவர்களைக் கடைத்தேற்றவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி இவர்களை 'த்வம் மே' என்று கைபிடிக்க அப்பொழுதும் இவர்கள் 'அஹம் மே' என்று விலகி நிற்கக் கண்டு, மனமுடைந்து இரு நதிகளுக்கிடையிலேயுள்ள அணியரங்கமாகிய ஒரு திடரிலே ஓர் பைந்தலைப்படவரவின்மேல் கிடந்தருள, இவரைப் பாதாதிகேசமா

யநுபவிக்கும் ஓர் வ்யாஜத்தைக்கொண்டு நம்முனோர் உள்ளங்களையெல்லாம் இவர்பக்கல் இழுக்கின்றார் இவ்வாழ்வார். எனவே எம்பெருமானுடைய கல்யாணகுணங்களில் ஈடுபட்டுப் பக்தியில் மறந்துசெய்யாள் படிகாட்டிய பண்புடைய ஓர் சிற்புருஷக்கொடியின் அவஸ்தையை அடைந்து, அவனைப்பரப் பாவிய ஸ்ரீதேசிகன் இவ்வாழ்வாரிடம் மிகவும் ஆதரங்காட்டியதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

இவ்வாழ்வார் அருளிச்செய்தது அமலனாதிபிரான் என்னும் ஓர் சிறு ப்ரபந்தமே. ஆயினும் இதில் வேதப்ரஸித்தமாகிய பகவத்குணங்கள் யாவும் வர்ணிக்கப்படுகின்றன. சாந்தோக்யத்தில் கூறப்பட்டுள்ள அந்தராதித்யவித்யைக்கு ஓர் வ்யாக்யானமிதுவோ போல் பகவானுடைய கண்ணழகை ஸ்வபாவோக்தியாக வர்ணிக்கும் “அரங்கத்தமலன் முகத்துக் கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே” என்னும் வார்த்தைகள் நெஞ்சம் புகுந்து தித்திக்குமவைகளாம். இப்பிரபந்தத்தின் முதல் மூன்று பாசுரங்களின் முதலெழுத்துக்கள் ப்ரணவத்தை ஸூசிப்பதையும், இதன் பத்துப் பாசுரங்களிலேயும் திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்னும் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தங்கள் பொதிந்து கிடப்பதையும் நோக்கின், ரஹஸ்யத்ரயங்களின் ஸாரத்தை உலகினுக்கு எடுத்துக்காட்டவே வந்தவதரித்த நம் தேசிகத்தோன்றல் இதற்கு மிகச் சிறந்ததோர் வ்யாக்யானமிட்டருளியது மிகவும் பொருத்தமுடையதே என்பது தெரியவரும். இப்பிரபந்தத்தில் ஆழ்வார் வெளியிட்ட கருத்துக்களை ஸ்ரீதேசிகன் தமது திவ்ய ஸூக்திகளில் ஆங்காங்கு கையாளும் அழகும் மிகச் சீரியதாம்.

இவ்வாழ்வாருடைய வரலாறும், இவர் லோகஸாரங்கமுனிவரது தோள்மேலேறி நம்பெருமாள் திருவோலக்கத்திற்குச் சென்றதும், அங்கு சயனித்துக்கொண்டிருக்கும் பகவானை ஆபாதசூடம் அநுபவித்ததும், பின்னர் ஓர் சோதியுருவாய் நம்பெருமானுடன் ஐக்யமானதும் ஆசார்யபரம்பரையில் ஸேவிக்கலாம். இவர் நம்பெருமான் திருவோலக்கத்திற்குச் சென்றது வர்ணவ்யவஸ்தையைக் கடந்ததன்றாம்.

“பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்கொல்? அறியேன்”



என்னும் இவருடைய பாசுரமே இதற்கோர் நிதர்சனம். மற்றைய ஆழ்வார்கள்பலருமிருக்க இவ்வாழ்வாருடைய அநுபவத்தை மாத்திரம் ஸ்வாமி தேசிகன் விரித்துரைத்ததற்கு ஸ்வகபோலகல்பிதங்களும் பெரியோர்கள் ஒவ்வாதனவுமாகிய சில காரணங்களைக் குறிப்பர் சில நவீனர்கள். விரிவஞ்சி இவற்றின் பரிசீலனத்தில் நாம் இறங்கவில்லை.

**கைசிகஏகாதசி**— கார்த்திகைமீ 29உ (14-12-37) ஸ்ரீரங்கத்தில்மாத்திரம் கைசிகஏகாதசி ஐப்பசிமீ 29உயும், வைகுண்ட ஏகாதசி கார்த்திகைமாதம் 29உயும். இவ்வருஷம் கார்த்திகைமீ 19உ (4—12—37) யன்று ஸ்ரீரங்கத்தில் திருவத்யயனோத்ஸவம் ஆரம்பம். இவ்வுத்ஸவத்துக்கிடையில் நம் ஸபையின் வார்ஷிக ஸதஸ் நடைபெறும். அனைவரும் எழுந்தருளியிருந்து இதை நடத்திவைக்குமாறு ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

---

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

## தூப்புல் ஸ்ரீவேதாந்ததேசிகன் உத்ஸவம்.

நாளது ஈச்வர-வருஷ புரட்டாசிமீ 19உ (5—10—37) முதல் 28உ (14—10—37) வரை ஷை. உத்ஸவம் நடைபெற்றது. எட்டுத் திருநாள்கள் பகலில் ஒரு வேளை தோளுக்கினியானில் எழுந்தருளியாச்சுது. ஆனால் தூப்புலிலிருந்து சின்னக் காஞ்சீபுரம் சேர்ந்து மாடவீதி ப்ரதக்ஷிணமாகி ஸன்னிதிவீதி எழுந்தருளினால்தான் இங்கு உத்ஸவபூர்த்தியாகையால், பகல் உத்ஸவங்களுக்கு சராசரி ரூபாய் 30-பிடிக்கிறது. எனினும் நாலாவது உத்ஸவத்திற்கு உபயக்காரர்கள் இல்லாமல் நிறுத்தப்பட்டது. முதல் நாள் ராத்திரி ஒருமணி சுமாருக்கு அவ்வூரிலுள்ள ஸ்ரீ-உ-வே. கடல்மங்கலம் கோவிந்தாசாரியர் ஸ்வாமி தூப்புல் வேதசாஸ்த்ர பாடசாலை உபாத்யாயர் ஸ்ரீ-உ-வே. அழகூர் திருமலாசார்யரை அழைத்துக்கொண்டு, ஷை உத்ஸவத்தைக் கவனித்து நடத்திவைக்கும் ஸ்ரீ-உ-வே. வித்வான். அய்யா கிருஷ்ணஸ்வாமி தாதாசார்யரிடம் சென்று, “ஸ்ரீதேசிகன் திருவடிகளான நாம் கணக்கற்ற பேர்களிருந்தும், உத்ஸவத்தை ஆரம்பித்து மத்தியில் நிறுத்துவது பொருத்தமாகாது. வருத்தமாக இருக்கிறது. அடியேன் ஏழையானதால் ரூபாய்-25-இல் நாலாவது உத்ஸவத்தை நடத்திவிடவேணும், எப்படியாவது ஒரு வாரத்தில் பணம் சேர்த்து

விடுகிறேன். மேல் உத்ஸவங்கள் ஏதாவது நிற்கிறதாக இருந்தால்,
இவ்வுத்ஸவமும் வேண்டாம்" என்றபோது கூடவந்த பண்டிதர்
திருமலாசாரியார் அடியேனைக்கொண்டு ஸ்ரீதேசிகன் மேல்நிற்கும்
உத்ஸவத்தை நடத்திக்கொள்வார் என்றார். ஸ்ரீ-உ-ப-வே. அய்யா
ஸ்வாமியும் அங்கீகரித்த பின், ஷை உத்ஸவம் மறுநாட் காலை
நடைபெற்றது. ஸ்ரீதேசிகன் உஞ்சவ்ருத்திபரராக க்யாதிலாப
பூஜாநிரபேக்ஷராக அரசர்கள் அழைத்தபோதும், அங்கு எழுந்த
ருள அங்கீகரியாமல் இருந்ததுபோலவே 'நிஷ்கிஞ்சனுவயம் சச்
வத் நிஷ்கிஞ்சனஜனப்ரியா:' (நாமும் ஏழைகள் நம் ஸகாக்களும்
ஏழைகள்) என்று ஸ்ரீகண்ணன் அருளிச்செய்ததுபோலத் தமக்கு
ப்ரியரான ஏழைகளைக்கொண்டே தம்கார்யங்களை நடத்திக்கொள்
ளுவதில் திருவுள்ளம்போலும். பின்பு, ஒன்பதாவது உத்ஸவம்
சென்ற வருஷம் ஒருநாளாவது ராத்ரி உத்ஸவம் கண்டருள
வேண்டும் என்று ஸ்ரீ அய்யாஸ்வாமி நியமித்ததின்பேரில், தற்கா
லம் சென்னை புரசைவாக்கத்தில் வஸிக்கும் பரவஸ்து ஸ்ரீநிவாஸா
சார்யர் அங்குள்ள தம் ஸுஹ்ருத்துக்களைக்கொண்டு ஸமர்ப்பி
வித்த ரூபாய் 50-ம், சித்தூரிலிருந்து ஸ்ரீ-உ-ப-வே. ஸ்ரீநிவாஸராக
வாசார்யர் மூலம் வந்த ரூபாய்-30. ஆக ரூபாய்-80-ஐக்கொண்டு
நடந்ததுபோல், இவ்வருஷமும் சென்னையில் கிடைத்த 75-ரூபா
யைக்கொண்டு ராத்ரி உத்ஸவம் நடைபெற்றது. புறப்பாடு ஸம
யத்தில் சிறிது மழையாக இருந்து நின்று, பின்பு சிரமமன்னி
யில் ஸ்ரீதேசிகன் தீவட்டி மத்தாப்புக்களுடன் சின்னக்காஞ்சி
புரம் எழுந்தருளியது அங்குள்ள பெரியோருக்கு முன்னாள் உத்
ஸவங்களைச் சிறிது நினைப்பூட்டியது. ஸ்ரீதேவப்பெருமாளுக்கு
நவராத்ரி உத்ஸவமானதால், ஸ்வாமிகள் அதிகம் தூப்புலில்
ஸேவை ஸாதிக்கமாட்டார்கள் என்றே அவ்வூர் வழக்கப்படி. காணி
க்கைகள் கொஞ்சமே ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீதேவப்பெரு
மாள் உத்ஸவத்திற்கும் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்திற்கும் விரோத
மன்றியில் தேவஸ்தானம் கர்மகர்த்தாக்கள் நடத்திவைப்பது
உசிதமாகும். மறுநாட் காலையில் ஸ்ரீதேசிகன் திருமஞ்சனம்
கண்டருளி ஸ்ரீதீபப்ரகாசன் ஸன்னிதியில் மங்களாசாஸனம்
செய்தருளி, ஸ்ரீதேவப்பெருமாள் வரவிட்ட தங்கப்பல்லக்கில்
பத்து ஜதை வெண் குடைகள் பாண்டு முதலிய பல வாத்யங்க
ளோடு சின்னக்காஞ்சீபுரம் கோவில் சேர்ந்து, வாஹனமண்டபத்



தில் ஸ்ரீதாததேசிகனுக்கு மாலை மரியாதைகளை ப்ரஸாதித்துப்
பின்பு தோளுக்கினியானில் கோயிலுவுள்ள ஸன்னிதிகள் அனைத்
தையும் மங்களாசாஸனம் செய்து மலைக்கு எழுந்தருளினர்,

ஸன்னிதிகள்தோறும் அவ்வோ மூர்த்திகள் விஷயமாய் ஸ்ரீ
தேசிகஸ்ரீஸூக்திகளை முன்வழி யறிந்தவர் அநுஸந்தித்தது
முக்யமாகும். மலைமேல் ஸ்ரீதேசிகன் ஸ்ரீதேவாதிராஜன் திருவடி
வாரம் சேர்ந்து, மங்களாசாஸனம் செய்த பிரகாரங்கள் சொல்ல
நிலமல்ல. இக்காக்ஷி ஸேவித்தவரே இதற்கு ஸாக்ஷியாவார்கள்.
பின்பு எதிர் மண்டபத்தில் எழுந்தருளி கோஷ்டி, தீர்த்தம் சட
கோபம் ஆனபின் பெருந் திரளோடு கச்சிவாய்த்தான் மண்டபத்
தில் ஸ்ரீதேசிகனுக்கு என்றே அமைந்திருக்கும் சிறிய சிரிய மண்
டபத்தில் சேர்ந்து தம்முடைய அபீதிஸ்தவம் முதல் பாட்டே
கேயே ச மதுரமான ஸ்ரீஸூக்திகளைப் பலர் உச்சஸ்வரத்தோடு
ஸேவிக்கக் கண்டருளிய அந்தக் காலக்ஷேபத்தின் பெருமையினரு
மையை யார்சொல்லவல்லார்? அதற்குதான் ஸ்ரீதேசிகன் இளம்பிரா
யத்தில் ஸ்ரீநடாதூர் அம்மாள்காலக்ஷேபகோஷ்டியில் அம்மாளுடன்
சென்று, விட்ட இடத்தை அருளிச்செய்ய, "ப்ரதிஷ்டாபிதவே
தாந்த: ப்ரதிக்ஷிப்தபஹிர்மத: | பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம்
பூரி கல்யாணபாஜனம்" (வேதாந்தத்தை ஸ்தாபித்து வெளிமதங்
களை நிரஸித்துப் பெரியோர்கள் கொண்டாடும்படி மிகுந்த க்ஷே
மத்திற்கு ஆளாகவேண்டும் நீ) என்று ஸ்ரீ அம்மாளால் ஆசீர்
வதிக்கப் பெற்றது. ஸ்ரீதேசிகன் அங்கிருந்து புறப்படும் ஸமயம்
ஸ்ரீதேசிகனுக்காகவே நவராத்திரி உத்ஸவத்தை முடித்துக்
கொண்டு மலைக்கு எழுந்தருளிய பெருமாள் ஸர்வாபரணபூஷித
ராகச் சிறிய சிங்கம்போலக் கோயில் நின்று இங்ஙனே எழுந்தருளி,
கோப்புடைய சீரிய சிங்காஸனத்திற்கு ஸேவை ஸாதித்துக்
கொண்டு தெற்கு ப்ராகாரத்தில் எழுந்தருளிய ப்ரகாரத்தை என்
னென்று வர்ணிப்பது? திருவபிஷேகமண்டபத்தில் பெருமாள்
நின்று ஸங்கல்பஸூர்யோதயத்தின்படி விசாரங்களை விழ்த்தி
ஸத்ஸம்ப்ரதாயஸ்தாபனம் பண்ணினவர் ஸ்ரீதேசிகன் பரிகாரம்
விஜ்ஞாபிக்க, 'சிரஸ்ஸு நிஹிதம் மயா பதயுகம் த்வயா லக்ஷ்யதாம்'
(பிறர் முடிகளில் பாதம் இடவடியை வைத்தோம் காணலாம்)
என்றபடி பிறர் இடக்கை அடக்கிய ஸ்ரீதேசிகன் இடது திருவ
டிக்கு தயவர்ச்சசங்கலியையும் சாதாரவையும் பண்டிதஸார்வ

பௌமமான இவருக்கு ஆதரவுடன் அளித்து விடைபெற்ற தேசிகன் குடை முதலிய வரிசைகள் வரிசையாக இருக்குமிடம் சேரும்வரை சோராது கடாக்ஷித்துக்கொண்டு

𑌨 𑌹𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍀 𑌵𑌾 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌤𑍍 ।
𑌨𑌰𑌃 𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌪𑌾𑌕𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌰𑌾𑌘𑌵𑍇 ॥

(பொருள்) ஸ்ரீராகவன் சென்றபின்பும் அவரிடமிருந்து மனம் கண்கள் இவைகளை மனிதன் மீட்கமுடியவில்லை என்னும்படி எழுந்தருளியிருந்த நேர்மையின் சீர்மையை என்னென்று சொல்வது? பின்பு ஸ்ரீதேசிகன் வீதிவலமாக மத்தாப்பு தீவட்டி வாணவேடிக்கைகளுடன் தூப்புல் சேர்ந்து ஸ்ரீதீபப்ரகாசன நாச்சிமார்கள் ஸ்ரீஹயக்ரீவனுடன் திருமஞ்சனம்கண்டருளி மூன்று மணிக்குள் சாற்றுமுறையும் கோஷ்டியும் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகள் அனுஸந்திக்க நடந்தபின் ஸ்ரீதீபப்ரகாசர் கோயில் எழுந்தருள தாமும் ஆஸ்தானம் எழுந்தருளி உத்ஸவத்தை தலைக்கட்டியருளினார். விஜயதசமிக்காக அன்று பகல் முழுவதும கைங்கர்யம் செய்த பாகவதர்களோடு ராத்திரியில் ராஜகுளம் சென்று உத்ஸவம் கண்டருளி 5-மணிக்கு அவஸரமாக 5-மைல தூரத்திலிருந்து எழுந்தருளின ஸ்ரீதேவப்பெருமாளையும் ஸேவித்து ஸ்ரீதேசிகன் சாற்றுமுறை முடிந்து வந்த சிலர் மகிழ்ந்து புகழ்ந்தார்கள். சாற்றுமுறை உத்ஸவம் விசேஷமான பக்ஷ்யங்கள் தளிகையுடன் சீரும்சிறப்புமாக நடைபெற்றது. மற்றவைகளிலுள்ள குறைகளை மறைத்தது. இவ்வுத்ஸவம் மைஸூர் பரமபரி ஸ்ரீபரகாலஸ்வாமி அன்புடன் அனுப்பின ரூபாய் முன்னூறு கொண்டு வருஷம்தோறும் நடைபெறுகிறது. இது ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவன் திருவடிகள் முந்நூறு ரூபா ஸமர்ப்பித்து நடந்ததாம். இதுபோல மற்றும் மடாதிபதிகளும் ஆசார்யஸ்வாமிகளும் ப்ரமுகர்களும் ஸ்ரீதூப்புல் தேசிகன் உத்ஸவத்தை ஆரம்பம் முதல் அழகாக நடத்திவைக்க வேண்டுமென வேண்டுகிறோம். இத்தூப்புல் ஸந்நிதி வாசலில் ஸ்ரீதேசிகன் திருத்தேர் வெய்யிலிலும்மழையிலும் காய்ந்தும் நனைந்தும் இருப்பது வருந்தத்தக்கது. யாருடைய மனோரதத்தில் புகுந்து இச்சிறிய ரதத்தை மனோரதஸாரதியான பார்த்தஸாரதி ஸார்த்தமாக்குவனோ?

(ப. ஸ்ரீ.)

## ஒன்பதாவது நீதிமத்பத்ததி.

𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌭𑍁𑌵𑌨𑍇 𑌸𑌮𑍇 𑌷𑌾𑌡𑍍𑌗𑍁𑌣𑍍𑌯𑌶𑌾𑌲𑌿𑌨𑌿 ।
𑌭𑌜𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌤𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍇 ॥

விக்ரமாக்ராந்தபுவனே ஸமே ஷாட்குண்யசாலிநி ।
பஜதி ஸ்திரதாம் லக்ஷ்மீ: கஸ்மிம்ச்சித் புருஷோத்தமே ॥

(பதவுரை) 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌭𑍁𑌵𑌨𑍇 [விக்ரமாக்ராந்தபுவநே]- பராக்ரமத்தால் ஜயிக்கப்பட்ட பூமண்டலத்தையுடையவரும் (திருவடியின் வைப்பால் தாவி அளக்கப்பட்ட உலகங்களை உடையவரும்), 𑌸𑌮𑍇 [ஸமே] - ஸர்வ ஜநங்களிடமும் பக்ஷபாதமன்னியில் ஸமநிலையுடையவரும், 𑌷𑌾𑌡𑍍𑌗𑍁𑌣𑍍𑌯𑌶𑌾𑌲𑌿𑌨𑌿 [ஷாட்குண்யசாலிநி] - ஸந்தி, விக்ரஹம், யாநம், ஆஸநம், த்வைதீபாவம், ஸமாச்ரயமென்னும் ராஜநீதி குணங்களோடு விளங்குகிறவரும் (ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம் வீர்யம், தேஜஸ் என்ற ஆறு குணங்களோடு ஸம்பந்நருமான), 𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [கஸ்மிம்சித்] - ஏதோ ஒரு (அபூர்வமான), 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍇 [புருஷோத்தமே] - நராதிபனிடத்தில், (பகவானிடத்தில்,) 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 [லக்ஷ்மீ:] - லக்ஷ்மியானவள், 𑌸𑍍𑌥𑌿𑌰𑌤𑌾𑌂 [ஸ்திரதாம்] - நீங்காத இருப்பை, 𑌭𑌜𑌤𑌿 [பஜதி] - அடைகிறாள்.

அவதாரிகைளுடன் தாத்பர்யங்கள்— முன் ச்லோகத்தில் கங்கை, கங்காபுத்ரரான பீஷ்மர் இவர்கள் ப்ரஸ்தாவம் நடந்தது. த்ரிவிக்ரமனுடைய திருவடியிலிருந்து கங்கை உத்பத்தியானாள். பீஷ்மர் ராஜதர்மங்களை விஸ்தாரமாகத் தர்மபுத்ரருக்குச் சாந்தி பர்வத்திலுபதேசித்தார். ஓர் அரசனுக்கு இந்த க்ரந்தம் எழுதி அனுப்பப்பட்டது. ராஜநீதியை இதில் உபதேசிக்காமலிருக்கலாமோ? ராஜா வ்யாஜமாத்ரம். அவரை உத்தேசித்து உலகத்திற்கு உபதேசம். ஓர் பத்ததியாவது ராஜநீதியை உபதேசிக்க வேணுமென்று இந்த நீதிமத்பத்ததியைச் செய்தருளினார். இந்தப் பத்ததியின் 2-வது ச்லோகத்தில் ராஜாவைச் சுட்டியே 'ஏழையும் தள்ளி, ஸுகமாயிரு' என்று நேருக்கு நேராய் எழுதுகிறார். முதல் ஸுஜனரான பெருமாளையும்கூடச் சேர்த்துக்

கொண்டே பேசுகிறார். விஷ்ணுவின் அம்சமல்லாதவன் ராஜாவாக மாட்டான். பெருமாளுக்கும் அரசனுக்கும் விசேஷணங்கள் ஒட்டுகின்றன. உலகளந்த த்ரிவிக்ரமனோடு இந்தப் பத்ததியைத் துடங்குகிறார். ப்ரஹ்மசாரியான வாமனரே த்ரிவிக்ரமர். ராஜா ரஹஸ்யமாக ஆயுதங்களையும் ஸேனைகளையும் சேர்த்துக்கொண்டு திடீரென்று ஓங்கிப் படையெடுக்கவேணும். ப்ரஹ்மசாரியாயிருக்கையிலும் லக்ஷ்மி திருமார்பிலிருந்தாள் என்பதை ஸூசித்துக் கைமுத்யத்தால் லக்ஷ்மி நித்யானபாயிநியாய், சாச்வதமாய்ப் புருஷோத்தமனை ஆச்ரயித்திருப்பதை விளக்குகிறார். 'எல்லா ப்ராணிகளிடம் நான் ஸமன்' என்றார் பெருமாள். அரசனும், மந்த்ரிகளும், ந்யாயாதிபதிகளும் அப்படியே ஸமர். பெற்ற பிள்ளைகளிடமும் ஸமமாகப் பக்ஷபாதமன்றியில், ந்யாயமாக தண்டத்தை விதிப்பர். பெருமாளுடைய ஆறு குணங்கள் ப்ரஸித்தம். 'ஆந்ருசம்ஸ்யம் தயை முதலிய ஆறு குணங்கள் ராகவனென்னும் புருஷோத்தமனை அலங்கரித்தன' என்றார் ருஷி. ராஜநீதியிலும் ஸந்தி முதலிய ஆறு குணங்களுள. 'புருஷோத்தமன் என்பது 'ஹரி' ஒருவரைத்தான் சொல்லுமென்றார் காளிதாஸர். அப்புருஷோத்தமனுடைய அம்சமானதால் ராஜாவுக்கும் அந்த சப்தமென்று ஸூசிக்கிறார். த்ரிவிக்ரமன் ப்ரஸ்தாபத்தில் ராஜநீதி இயற்றிய சுக்ராசார்யருடைய நினைப்பும் வருகிறது. இந்த ராஜநீதிபத்ததியில் முதலில் சுக்ரரை (பார்கவரை) ஸ்மரிப்பிக்கிறார். வரப்போகிறதை அறியக்கூடிய கவிகளில் நான் சுக்ராசார்யனென்னும் கவி(க்ராந்ததர்சி) என்று கீதை. பார்கவரொருவரைத் தவிர மற்ற மந்திரிகளொருவரும் தவறாமலிருக்கமாட்டார். பார்கவரொருவர்தான் ராஜநீதியில் தவறிப்போவதேயில்லை என்ற வசனத்தைத் தாத்பர்யசந்த்ரிகையில் அங்கே எடுத்துக் காட்டப்பட்டது. சுக்ரர் தடுத்தார்; பலி கேட்கவில்லை. (97)

𑌏𑌕𑌯𑌾 𑌦𑍍𑌵𑍌 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌤𑍍𑌰𑍀𑌂𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌃 𑌵𑌶𑍇 𑌕𑍁𑌰𑍁 ।
𑌪𑌞𑍍𑌚 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 𑌷𑌟𑍍 𑌸𑌪𑍍𑌤 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑍀 𑌭𑌵 ॥

ஏகயா த்வெள விநிச்சித்ய த்ரீம்ச்சதுர்ப்பி: வசேகுரு ।
பஞ்ச ஜித்வா விதித்வா ஷட் ஸப்த ஹித்வா ஸுகீபவ ॥

(ப-ரை) 𑌏𑌕𑌯𑌾 [ஏகயா] - புத்தி என்னும் ஒன்றால், 𑌦𑍍𑌵𑍌 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 [த்வெள விநிச்சித்ய] - தர்மத்தையும் அர்த்தத்தையும் நன்று விசாரித்துத் தீர்மானித்து (பக்தி ப்ரபத்தி என்னும் இரண்டு உபாயங்களை நிச்சயித்து, பெருமாள் பிராட்டி என்னும் ஜோடியை சரணமாக நிச்சயித்து), 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 [த்ரீந்] - ஸுஹ்ருத்துக்கள் சத்ருக்கள் உதாஸீனரான மத்யஸ்தராகிய மூவிதமானவரையும் (தத்வத்ரயத்தையும் ரஹஸ்ய த்ரயத்தையும்), 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌃 [சதுர்பி:] - ஸாம தான பேத தண்டமெனும் நான்கு உபாயங்களால் (அதீதி போதம் ஆசரணம் ப்ரசாரணம் என்ற நாலினாலும்), 𑌵𑌶𑍇𑌕𑍁𑌰𑍁 [வசேகுரு] - வசப்படுத்து, 𑌪𑌞𑍍𑌚 [பஞ்ச] - ஐந்து புலன்களையும், 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 [ஜித்வா] - ஜயித்து, 𑌷𑌟𑍍 [ஷட்] - ஸந்தி விக்ரஹம் முதலிய ஆறையும் (ஷடங்கமான ப்ரபத்தியை), 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 [விதித்வா] - அறிந்து (அடைந்து), 𑌸𑌪𑍍𑌤 [ஸப்த] - ஏழு வ்யஸநங்களையும் [ப்ரக்ருதிதோஷங்களேழையும்), 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 [ஹித்வா] - தள்ளி, 𑌸𑍁𑌖𑍀𑌭𑌵 [ஸுகீபவ]-ஸுகமாக இரும்(பேரின்பசாலியாவாய்)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ராஜநீதி மந்த்ராலோசனை முதலியது மறைவாய்(ஸம்வருதமாய்) இருக்கவேணும், ரஹஸ்யோபதேசமும் ரஹஸ்யமாயிருக்கவேணும். இலக்கங்களாலேயே குறிப்பிட்டுப் பேசுகிறார். ஸ்ரீவசனபூஷண ரஹஸ்யத்தில் இலக்கங்களால் பேசுவது அதிகம். இங்கே அரசனுக்கு நேராக எழுதுவதும் தவிர, நீ ஸுகியாயிருப்பாயாகவென்று ஆசிர்வாதத்தையும் வைக்கிறார். இந்த ச்லோகம் இரண்டு கோசங்களிலில்லை. இதைச் சேர்த்தால் கணக்கு அதிகம் ஆகிறது. (98)

𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌭𑍂𑌤𑍍𑌯𑌾 𑌚𑌕𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌂 ।
𑌜𑌨𑌯𑌤𑍍𑌯𑌚𑌿𑌰𑌾𑌦𑍍𑌭𑍇𑌦𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌮𑌹𑌤𑌾𑌨𑍍𑌵𑌯𑌃 । ॥ ௯௯ ॥

பாாத்திவாநாம் பதார்த்தாநாம் ஸ்வபூத்யா சக்ரவர்த்திநம் ।
ஜநயத்யசிராத்பேதம் சித்ரேண மஹதாந்வய: ॥ (99)

(ப-ரை) 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 [பதார்த்தாநாம்] - ரக்ஷிப்பதற்கென்றே தோன்றிய (வஸ்துக்களுக்கு, பாண்டங்களுக்கு), 𑌸𑍍𑌵𑌭𑍂𑌤𑍍𑌯𑌾 [ஸ்வபூத்யா] - தங்களுடைய ஐச்வர்யத்தால் மஹிமையால் (அந்த மண்பாண்டங்களைப் பண்ணுவதில் சூளையிலுள்ள எரிசாம்பலோடு கூட), 𑌚𑌕𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌂 [சக்ரவர்த்தி

நாம்] - அரசர்களுக்கு (மண்ணால் செய்த பாண்டங்களுக்கு), மஹதா [மஹதா] - பெரிய, சித்ரேண [சித்ரேண] - ஸ்வஜநங்களுக்குள் அந்த:கலஹத்தால் (ஓட்டையோடு பள்ளம் வளைவுகளோடு), அந்வய: [அந்வய:]-ஸம்பந்தம், அசிராத் [அசிராத்]-சீக்ரத்தில், பேதம் [பேதம்] - அந்தரங்கபகலஹத்தை (உடைவதை, வைலக்ஷண்யத்தை), ஜநயேத் [ஜநயேத்]-உண்டாக்கும். 'ஸூசயதி' என்றும் பாடம். ஸூசித்துக்காட்டும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— மண்குடத்தில் பெரிய (ஸி)சித்ரம் வந்துவிட்டால், உடைபடும்படி நேரிடும். 'அச்சித்ரமான குடம்' என்பர். உள்ளே பொத்தல் விழுந்த மண்குடம் எப்படி உடைந்துபோமோ அப்படியே உள்ளே சித்ரமெனும் கலஹத்திற்கு இடங்கொடுக்கும் அரசர் ஸ்வஜனங்கள் ஞாதிகள் முதலியவரை ஆராதித்து அநுகூலராகவேயிருக்கச்செய்ய வேணும். "ஞாதிகளுக்குத் தாம் பூஜை செய்வதையும் அவர்களுடைய கடுஞ்சொற்களைப் பொறுப்பதையும் கண்ணனே பேசினார். 'வேலைக்காரர்களை ஸகாக்களைப்போலவும், ஸகாக்களைப்பந்துக்களைப் போலவும் பந்துக்களைத்தனக்கு மேலாயும் அரசன் பார்க்கவேணுமென்று பாரவி காட்டினார். முன் ச்லோகத்தில் தனக்குள்ளேயே இருக்கும் இந்த்ரியங்களைத் தன்சத்ருக்களாகாமல் கலஹமில்லாமல் அநுகூலமாக வைத்துக்கொள்ளவேண்டியதைக்காட்டினார். இங்கே ஸ்வஜனங்களுக்குள்ளே கலஹமில்லாமல், எல்லோரையும் தனக்கநுகூலராகவே செய்துகொள்ளவேணுமென்கிறார். என்ன பலமிருந்து உள் சித்ரம் (ஓட்டை) இருந்தால், பொத்தக்குடம் போல்தான் என்று ஸூசிக்கிறார். இரண்டும் பார்த்திவம் தான்; இரண்டும் சக்வர்த்திகள் தான்; இரண்டுக்கும் 'பூதி' யுண்டு. உள்ளோட்டை விழாதவரையில் இரண்டும் தன் கார்யங்களைச் செய்யும். 'சித்ரம்' என்னும் ஓட்டை பள்ளம் விழும் மண்ணாயிருந்தால் அந்த மண் உயர்ந்த விலக்ஷணமானதாகுமென்று நரகேஸரி வ்யாக்யானம். 'பேதம்' என்பதற்கு 'வைலக்ஷண்யம்' என்று பொருள். குழி பள்ளம் எளிதில் விழும் மண்ணால் குடம் வாணலி செய்ய அது உயர்ந்த மண். (99)

ஸதஸந்தௌ விசிந்வாந: ஸமவர்த்தீ ஸமப்ரத: ।
அபி தண்டதரோ நித்யம் லோகபாலஸ்ஸதக்ஷிண: ॥



[illegible]-600 [illegible]

ஸதஸந்தௌ விசிந்வாந: ஸமவர்த்தீ ஸ[illegible]
அபி தண்டதரோ நித்யம் லோகபாலஸ்ஸதக்ஷிண: ॥ (100)

(ப-ரை) ஸதஸந்தௌ [ஸதஸந்தௌ] - நல்லோரையும் தீயோரையும், (நல்லதையும், பொல்லாததையும், குணதோஷங்களை,) விசிந்வாந: [விசிந்வான:] - பராமர்சித்து, ஸமவர்த்தீ [ஸமவர்த்தீ] - எல்லோரிடமும் பக்ஷபாதமன்றியில் ஸமானமாய் இருந்துகொண்டு, (யமன்,) ஸமப்ரத: [சமப்ரத:] - ஒருவருக்கொருவர் விரோதத்தைச் சாந்தராக்கி, (எல்லாப்ரவ்ருத்திகளையும் ஒடுங்கச்செய்யும் யமன்), நித்யம் [நித்யம்] - எக்காலமும், தண்டதர: அபி [தண்டதர: அபி] - தண்டத்தை விதித்துக்கொண்டேயிருந்தாலும், (காலதண்டம் தரித்தவனாயிருந்தாலும்,) ஸ: [ஸ:] - அந்த, லோகபால: [லோகபால:] - உலகத்தைக் காக்கும் அரசன், (திக்பாலகர்), தக்ஷிண: [தக்ஷிண:] - ஹிதத்தைச் நினைத்து ஹிதத்தைச் செய்பவரே, கெட்டிக்காரரே, தயாளுவே. (தெற்கு திக்பாலகர்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— பந்துக்களைப் பஜிக்க வேண்டுமென்றார். பந்துக்களும் ப்ரஜைகளுக்கு அக்ரமம் செய்தால் அவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது. பிறருக்குக் கெடுதல் செய்தால், அவர்களிடத்தில் பக்ஷபாதம் செய்து, அவர்களைச் சிக்ஷிக்காமல் விடக்கூடாது, தன்னை அவமதித்தாலும், தனக்குக் கெடுதல் செய்தாலும் அதைப் பொறுக்கலாம். கண்ணனும் தனக்குச்செய்யும் குற்றங்களைப் பொறுப்பதைத்தான் பேசினார். ப்ரஜைகளுக்கு அந்யாயம் செய்தால், தர்மராஜாவைப்போல பக்ஷபாதமன்றியில் தண்டிக்கவேணும். தர்மராஜா பக்ஷபாதமில்லாதவர்; தர்மமொன்றையே அநுஷ்டிப்பவர். அவர் தர்மதேவதை. அவரை அதிசயித்தவர் அவர்புத்திரரான தர்மபுத்திரரொருவரே. தண்டிப்பதற்கும் தயாதாக்ஷிண்யத்திற்கும் ஒருவிரோதமுமில்லை. குற்றம் செய்பவனைச் சிக்ஷிப்பது அவனைச் சுத்தமாக்கும். தண்டிப்பதே அவன் விஷயத்தில் பரமதாக்ஷிண்யமாகும். அஸத்தை ஸத்தாக்கத்தான் அவனைச் சிக்ஷிப்பது. லோகபாலர்கள் அரசர்கள். பக்ஷபாதமன்றியில் சிக்ஷிப்பதுதான் தாக்ஷிண்யமாகும். ஆபாஸமான தாக்ஷிண்யத்தைப் பாராட்டிக் குற்றத்தைத்

தண்டிக்காமல் விடுவது உண்மையில் தாக்ஷிண்யமாகாது. யம னிலும் கொடிய தண்டம் விதிப்பாருண்டோ? மரணதண்டனை எல்லாம் அவரதிகாரம். நரகசிக்ஷையெல்லாம் அவரதிகாரம். ஆயினும், அவர் 'தக்ஷிணலோகபாலர்' என்று பட்டம் பெற்றவர். உலகத்தைக் காப்பவர்; அதிலும் தக்ஷிணராகக் காப்பவர். மற்ற வர்க்கு அப் பெயரில்லை. அவரைப்போல பக்ஷபாதம் பாராட்டா மல் சிக்ஷை விதிப்பதுதான் 'தக்ஷிணர்' என்னும் யசஸை அளிக் கும் என்று அழகாகக் காட்டுகிறார். 'ஸமவர்த்தீ', 'சமனர்', 'தண்டதரர்' இதெல்லாம் யமனுடைய திருநாமங்கள். அந்தத் திருநாமமெல்லாம் எப்படி ஸத்யமோ, அப்படியே தாக்ஷிண்ய குணத்தைப் பேசும் 'தக்ஷிணலோகபாலர்' என்பதும் ஸத்யமே. தெற்குத் திக்பாலரென்று மட்டும் பொருள் கொள்ளலாகாது. 'தண்டிக்கவேண்டியவனை ராஜா தண்டிக்காவிடில், அந்த ராஜா தர்மராஜாவால் நரகத்தில் தண்டிக்கப்படுவான்' என்று வசனம்.

யமேநோபக்ரமே ஜாநந் விஶ்வாதீஶம் வ்யவஸ்திதம் ।
ஸாமாதிஷு ச தத்த்வஜ்ஞ: ஸநகஸ்ஸித்திமர்ஹதி ॥ 101 ॥

யமேனோபக்ரமே ஜானன் விச்வாதீசம் வ்யவஸ்திதம் ।
ஸாமாதிஷு ச தத்வஜ்ஞ: ஸநகஸ்ஸித்திமர்ஹதி ॥ (101)

(ப-ரை) யமேநோபக்ரமே [யமேனோபக்ரமே] - அஹிம் ஸை, ஸத்யவசனம், ப்ரஹ்மசர்யம், பற்றறுத்தல், களவா டாமை ஆகிய ஐந்தும் யமமென்னும் முதல் யோகாங்கம்; இவ் வைந்தையும் பயிற்சிசெய்து அதனால் ராஜ்யைச்வர்யம் கிடைத் தது முதற்கொண்டே, (யமம் முதலிய அங்கங்களடங்கிய யோ கத்தால், ஸ்ருஷ்டித்தொடக்கத்திலேயே தம்முடைய உத்பத்தி முதற்கொண்டே.) விஶ்வாதீஶம் [விச்வாதீசம்] - ஸர்வலோகாதிபதி யான ஈச்வரன், வ்யவஸ்திதம் [வ்யவஸ்திதம்] - அந்தர்யாமியாய், பரமாத்மாவாய், ஸர்வநியந்தாவாய், ஸர்வத்திலும் எழுந்தருளியி ருப்பவரை, (கருடாரூடரானவரை,) ஜாநந் [ஜானன்] - அறிந்து, ஸாமாதிஷு ச (வ்யவஸ்திதம்) [ஸாமாதிஷு ச வ்யவஸ்திதம்] - ஸாமவேதம் முதலிய ஸர்வவேதங்களிலும் தாத்பர்யத்தோடு ப்ரதிபாத்யனாக இருப்பவனை, ஜாநந் [ஜானன்] - அறிந்து, (அல்லது ஸாமபேதாதிகளில்,) தத்த்வஜ்ஞ: [தத்வஜ்ஞ:] - தத்து



வத்தை அறிந்தவராய், (ஸாமம் தானம் முதலிய நான்கு உபா யங்களில் தத்துவம் அறிந்தவருமான,) ஸ: [ஸ:] - ஒருவரான, க: [க:] - எவர். ஸித்திம் [ஸித்திம்] - பூர்த்தியை, ஜயத்தை, ந அர்ஹதி [ந அர்ஹதி] - பெறத் தகாதவராவார். ஸநக: [ஸநக:] - ப்ரஹ்மகுமாரரான ஸனகமுனிவர், ஸித்திம் [ஸித்திம்] - தத்வதர்சனஸித்தியை, (மோக்ஷஸித்தியை,) அர்ஹதி [அர்ஹதி] - அடையத் தக்கவர். ஸ: க: என்னும் திருநாமங்களை ஸஹஸ்ர நாமத்தில்வஹிக்கும் ஹரிக்குப்புதிதாக ஒரு ஸித்தியும் அடைய வேண்டியதில்லை. 'யம் ஏநோபக்ரமே' என்றும் பதம் பிரிக் கலாம். ஏந:—என்பது பாபம், பாபம்போவதற்காக யாரை அறிவரோ, த்யானிப்பரோ.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ராஜாவாயினும் ருஷி யைப்போல் அஸங்கனாக இருக்கவேண்டும். யாஜ்ஞவல்க்யமுனி ராஜ ருஷியென்பர். அஹிம்ஸை முதலிய ஐந்து அங்கங்களையுடைய யமத்தைப்பயிற்சிசெய்யவேண்டும். இந்தரியஜயமடைவேனும் யமத் தில் முதலாவது அஹிம்ஸை. அதை விசேஷமாக ஆதரிக்கவேண் டும். யஜ்ஞத்தில் ஹிம்ஸை ஹிம்ஸையாகாது. க்ரமமான யுத்தமும் யஜ்ஞம்போன்றது. யுத்தத்தில் வதம் வதமாகாது. கூடியவரையில் யுத்தமில்லாத வழியைத் தேடவேண்டும். அஹிம்ஸையையே, ஸாமத்தையே பற்றப் பார்க்கவேணும். ஸர்வாந்தர்யாமியான பர மாத்மாவை மறக்கக்கூடாது. 'மாமநுஸ்மர யுத்ய ச' என்று பாடி னார் பெருமான். தன்னையும் நியமிப்பவர் பரமாத்மாவென்பதை எப்பொழுதும் நினைக்கவேண்டும். முன் ச்லோகத்தில் சொன்ன யமனுக்கு அவர் யமன். 'என்னையும் ஸம்யமனம் செய்வதில் விஷ் ணுவே ப்ரபு' என்று யமன் பாடினான். ஸனகர் நிவ்ருத்திதர்ம ப்ரவர்த்தகர். 'வி' என்பது பக்ஷிக்கும் பரமாத்மாவுக்கும் பெயர். வி + அவஸ்திதம் என்றும் பிரித்துக்கொள்ளவேணும். 'அவஸ் திதே:' என்று வ்யாஸஸித்தாந்தஸூத்ரத்தையும் நினைக்கிறார்.

தமிஸ்ராசாரிணாம் ரோத்தா விஜ்ஞாதாசேஷா மருத்ப்ரிய: ।
கபிக்ருத்யைரபி ஸ்தாநே பாதி வேலாதிலங்கிபி: ॥

தமிஸ்ராசாரிணும் ரோத்தா விஜ்ஞாதாசேஷா மருத்ப்ரிய: ।
கபிக்ருத்யைரபி ஸ்தானே பாதி வேலாதிலங்கிபி: ॥ (102)

(ப - ரை) தமிஸ்ராசாரிணாம் [தமிஸ்ராசாரிணும்] - திருட்டு முதலிய பாபம் செய்பவர்களை, நிசாசரர்களென்ற ராக்ஷஸர்களை, ரோத்தா [ரோத்தா] - தகைபவரும், அடக்குபவரும், விஜிதாக்ஷ: [விஜிதாக்ஷ:] - இந்த்ரியங்களை வசப்படுத்தியவரும், அக்ஷகுமாரனை ஜயித்தவரும், நக்ஷத்ரசக்ரத்தை அதிசயித்தவரும், மருத்ப்ரிய: [மருத்ப்ரிய:]-தேவதைகளுக்கு ப்ரியமானவரும், வாயுவுக்கு ப்ரியபுத்திரருமான அரசன், சந்திரன், ஹநுமார், வேலாதிலங்கிபி: [வேலாதிலங்கிபி:] - எல்லையை மீறி அதிசயமான வரம்பை மீறிய, கபிக்ருத்யைரபி [கபிக்ருத்யைரபி] - குரங்கு சேஷ்டைபோன்ற சபல சேஷ்டைகளாலும், தாண்டுகிறது முதலிய குரங்கு சேஷ்டைகளாலும்கூட, பாதி [பாதி] - விளங்குகிறுரென்பது, ஸ்தானே [ஸ்தானே] - யுக்தமே.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஜிதேந்த்ரியர்கள் ப்ரஸ்தாவத்திலும் ராஜநீதி, மஹாராஜஸசிவர், ராஜதூதர், யுத்தம் முதலிய ப்ரஸ்தாபங்களிலும் ஹநுமாரை மறக்கமுடியுமோ ? ராத்ரிஞ்சரரான ராக்ஷஸர்களுக்கு அந்தகரும், அக்ஷகுமாரனை ஜயித்தவரும், மருத்தெனும் வாயுவுக்கு ப்ரியபுத்ரரான மாருதியையும் இரவில் திருட்டு முதலியதைச் செய்பவரையும், தம: கார்யமான பாபங்களை ஆசரிப்பவரையும் அடக்குபவரும், இந்த்ரியங்களை ஜயித்தவரும், யாகம் முதலியவற்றால் தேவர்களை ஆராதிப்பவருமான அரசர்களையும், இருட்டில் திருடப் பார்ப்பவர்களுக்கு வெளிச்சத்தால் இடையூறு செய்பவரும், அக்ஷமெனும் நக்ஷத்ரசக்ரத்தை ஜயித்தவரும், தேவர்களுக்குத்தன் உடம்பையே ஓரோர் கலையாக உண்ணக்கொடுப்பவருமான சந்த்ரனையும் சேர்த்துப் பேசுகிறுர். ஸமுத்ரத்தை லங்கனம் செய்தார் ஹநுமார். தாண்டுவது கபிகள்ஸ்வபாவம்; கபிக்ருத்யம். ஸாஹஸத்திலிறங்காமல், பத்ரங்கள் க்ஷேமங்கள் கிடைக்கா என்பர். ஜயவிஷயத்தில் துணிந்து ஸாஹஸக்ருத்யங்களைச் செய்வதும் அலங்காரமேயாகும். சந்த்ரன்போன்ற லோகோபகாரிகள் குருதாராபஹாரரூபமான வரம்பை மீறிய ஓர் சபலவ்யாபாரம் செய்தாலும், அவருடைய அனேக குணங்களில் அந்த தோஷம் மறைந்துவிடுகிறது.



அங்கயுக்த: க்ருதாஸ்த்ரச்ச
குர்வந் ஸம்யக் புரோவிதிம்
விஜாநந் ஸித்தஸாத்யாதீந்
வைரிமந்த்ரைர் ந பீட்யதே ॥ ॥ ௧௦௫ ॥
(வைரிமந்த்ரைர் ந பீட்யதே)

அங்கயுக்த: க்ருதாஸ்த்ரச்ச குர்வந் ஸம்யக் புரோவிதிம் ।
விஜாநந் ஸித்தஸாத்யாதீந் வைரிமந்த்ரைர் ந பீட்யதே ॥
(வைரிமந்த்ரைர் ந பீட்யதே)

(ப-ரை) அங்கயுக்த: [அங்கயுக்த:] - அரசன், மந்த்ரி, ஸுஹ்ருத்துக்கள், பொக்கிஷம் முதலிய ராஜ்யாங்கங்களோடு கூடியவரும், ஹ்ருதயம், சிகை, கவசம், அஸ்த்ரமெனும் மந்த்ராங்கங்கள் கூடியவரும், அஷ்டாங்கயோகத்தோடு அல்லது ஷடங்கப்ரபத்தியோடு கூடியவரும், க்ருதாஸ்த்ரச்ச [க்ருதாஸ்த்ரச்ச] - சஸ்த்ரவித்யையை, மோஹனப்பத்தை நன்று பயின்றவரும், அஸ்த்ரமந்த்ரத்தால் திக்பந்தனம் செய்தவரும், ப்ரணவமென்னும் தநுஸ்ஸிலிருந்து தன்னையே பரமாத்மாவின் மார்பில் (திருவுள்ளத்தில்) அஸ்த்ரமாக எறிந்துகொண்ட ப்ரபந்நனும், ஸம்யக் [ஸம்யக்] - நன்றாக, ராஜ்யதந்த்ரப்படி, மந்த்ரசாஸ்த்ரப்படி, வேதாந்தங்களிலும் ஆகமங்களிலும் விதித்தபடி, புரோவிதிம் குர்வந் [புரோவிதிம் குர்வந்] - ராஜதானியான புரத்தின் துர்கம் முதலிய ரக்ஷைகளைச் செய்தும், மேதாவியான வஸிஷ்டர்போன்ற புரோஹிதரைப் புரஸ்கரித்தும், மந்த்ரசாஸ்த்ரப்படி புரச்சரணத்தைச் செய்தும், நன்றாக ஸதாசார்யரை முன்னிட்டும், ஸித்தஸாத்யாதீந் [ஸித்தஸாத்யாதீந்] - இத்தனை செய்து ஸித்தமாயிற்று, இன்னது கார்யசேஷமாக பாக்கியுளது என்றும், ஸித்தம், ஸாத்யம், அஸாத்யம், த்யாஜ்யம் ஆகிய இவற்றையும் அப்பொழுதப்பொழுது பராமர்சித்து, ஸித்தம், ஸாத்யம், ஸுஸித்தம், வைரம் ஆகிய நான்கு வித மந்த்ரங்களையும், ஸித்தோபாயனை பரமாத்மாவையும் ஸாத்யோபாயமான ந்யாஸத்தையும் அதன் அங்கங்களையும், விஜாநந் [விஜாநந்] - விசதமாகத் தெரிந்தவனுமானவன், வைரி

ணா: [வைரிணா:] - சத்ருவான அரசனுடைய, சத்ருமந்த்ரவாதியினுடைய, காமன் முதலிய உள் சத்ருக்களின், அஸ்த்ரை: அஸ்த்ரங்களால், ந பீட்யதே [ந பீட்யதே] - பீடிக்கப்படமாட்டான், வைரிமந்த்ரை: [வைரிமந்த்ரை:] - சத்ருக்களின் மந்த்ராலோசனைகளால், எதிரியின் மந்த்ரங்களால்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள— 'அபியாதா ப்ரஹர்த்தா ச ஸேநாநயவிசாரத:' என்றபடி சத்ருவின் ராஜ்யத்தில் ஸாஹஸிகமாய்ப் புகுந்து, படையெடுப்பது முன் ச்லோகத்தில் பேசப்பட்டது. எதிரியால் அபியோகம் வரும்பொழுது ஸ்வதேசரக்ஷார்த்தமாகச் செய்யவேண்டியது இங்கே காட்டப்படுகிறது. யுத்ததந்த்ரம், மந்த்ரதந்த்ரம், ஆயுர்தந்த்ரம் ஆகிய மூன்றும் அரசருக்கு வேண்டியவை. அரசன் யுத்தவிசாரதனாயும், மந்த்ரவிசாரதனாயும், வேதாந்தாகமவிசாரதனாயுமிருக்கவேணும். ஜனகரைப்போலிருக்கவேணும். 'ப்ரத்யக்பாண: ப்ரணவதநுஷா ஸத்வவத்பி: ப்ரயுக்த:' என்று ஸங்கல்பஸூர்யோதயத்தில் ப்ரணவதநுஸிலிருந்து ஸ்வஸ்வரூபத்தையே பரமாத்மாவின் திருமார்பில் அஸ்த்ரமாக ப்ரக்ஷேபம்செய்து அங்கேயே லயித்து, தந்மயமாகி, கௌஸ்துபமாக விளங்குவது அழகாக விளக்கப்பட்டது. லக்ஷ்யத்தின் பேரில் ஏகாக்ரமாக அம்பெறியக் கற்ற அரசனுக்கு ஏகாக்ரதை நன்றாக ஸித்தித்திருக்குமாதலால், ஆத்மாவையே ஏகாக்ரமாக அம்புபோல ப்ரக்ஷேபம் பண்ணுவதும் அவருக்கு எளிதாகும். ஸித்தம் ஸாத்யம் என்னும் சப்தங்கள் ராஜ்யதந்த்ரத்திலும், மந்த்ரசாஸ்த்ரத்திலும், அத்யாத்மசாஸ்த்ரத்திலும் பாரிபாஷிகமான சப்தங்கள். ஸ்வாமி வாக்கில் எல்லாம் அஹமஹமென்று ஓடிவந்து சேருகின்றன. 'வித்யேநம் இஹ வைரிணம்' என்பது கீதை. (இந்தக் காமனை இந்தக் க்ரோதனை வைரியாக நினை.) வைரி என்னும் பதம் இந்தக் கீதாவசனத்தையும் நினைக்கிறது. 'ஓ மஹாபாஹுவான அர்ஜுனனே! காமனெனும் சத்ருவைக் கொல்வாய்' என்று பெருமாள் அர்ஜுனனுக்கு யுத்தமுனையில் உபதேசித்ததுபோல், யுத்தப்ரஸ்தாவமான ச்லோகத்தில் காமரூபசத்ருஹனனத்தையும் இங்கே ஸ்வாமி சேர்த்து அமைக்கிறார். (104)

காமாதிகரணக்ராஹ்யகு (மூ) லாதிபலசாலின: |
அஹீனேऽபி நரேந்த்ரஸ்ய சக்தயஸ்ஸித்திஹேதவ: || 105 ||



காமாதிகரணக்ராஹ்யகு (மூ) லாதிபலசாலின: |
அஹீனேऽபி நரேந்த்ரஸ்ய சக்தயஸ்ஸித்திஹேதவ: || (105)

(ப-ரை) காமாதிகரணக்ராஹ்யகு (மூ) லாதிபலசாலின: [காமாதிகரணக்ராஹ்யகு (மூ) லாதிபலசாலின:]-(1) போர் வீரர்களுக்கிஷ்டமான தனம், ஆஹாரம் முதலியதை ஸந்தோஷமாகக் கொடுத்து அவர்களுக்கு த்ருப்தி உத்ஸாஹம் முதலியதைச் செய்து, யுத்தத்திற்கு (ரணத்திற்கு) க்ரஹிக்கவேண்டிய மூலம் முதலிய ஆறு ஸாதனங்களான பலத்தோடு விளங்கும். (2) ஔஷதம் மணி மந்த்ரமென்னும் ஆசைப்படும் காமங்கள் கிடைக்குமிடமான ஆரண்யம் சரகம் மாந்த்ரிக ஸித்தர் ஆகிய அதிகரணங்களிலிருந்து க்ரஹிக்கப்படும் மூலம் மணி மந்த்ரங்களான பலத்தையுடைய (3) ஹ்ருதத்தில் ஆசையென்னும் யாகாதாரம், யாகம் செய்ய யோக்யமான பூமி, யாகத்திற்கு வேண்டிய த்ரவ்யஸம்பாரம், அதிகாசவரக்ஷைக்கு வேண்டிய ஸேநாபலம் முதலியதையுடைய. (4) சிஷ்யனுசைப்படுவதையெல்லாம் அளிக்கக்கூடியவரும், ஸாதகமனத்திற்கு யோக்யரும், அஷ்டாக்ஷரமூலமந்த்ராதிஸம்ஸித்திபலம் உடையவருமான, (5) ஆசைப்படவேண்டிய காமங்களெனும் வேதாந்தப்ரஸித்தமான கல்யாணகுணங்கள் உடையவரும் க்ராஹ்யமானதற்கெல்லாம் ஆதிமூலமாயும் பலம் முதலிய ஷட்குணங்களையுடையவருமான, காமம் க்ரோதம் முதலிய வ்யாதிபீடைகளையும், கரணங்களான இந்த்ரியங்களையும், க்ராஹ்யங்களான விஷயங்களையும், மூலத்தோடு க்ஷபணம் செய்யும் (ஸம்ஹரிக்கத்தக்க) பலத்தையுடையவருமான, நரேந்த்ரஸ்ய [நரேந்த்ரஸ்ய] - (1) ராஜாவுடைய (2) மாந்த்ரிகரான விஷவைத்யருடைய, அஹிதுண்டிகருடைய (3) ராஜஸூயாச்வமேதங்களைச்செய்யும் யஜ்வாவான ராஜாவினுடைய, (4) மூலமந்த்ராதிஸித்தரான ஆசிரியருடைய (5) பரமாத்மாவினுடைய, சக்தய: [சக்தய:] - ப்ரபுசக்தி முதலிய சக்திகள், மந்த்ரசக்திகள், அபூர்வமெனும் அத்ருஷ்டசக்திகள், மோக்ஷத்தையடைவிக்கும் அநுக்ரஹசக்திகள், அஹீனேऽபி [அஹீனேऽபி]-(1)ஹீன

னல்லாத, ப்ரபலமான சத்ருவிஷயத்திலும், (2) அஹி இநே, பாம்புகளுக்குள் இந்த்ரனை கொடிய பாம்புராஜாவிஷயத்திலும், (3) அஹீநமெனும் ஸத்ரயாகாதிகளிலும், 4, 5, இளப்பமல்லாத ஸர்வோத்க்ருஷ்டமான மோக்ஷபுருஷார்த்தத்தை யளிக்கும் விஷயத்திலும், ஸித்திஹேதவ: [ஸித்திஹேதவ:] - ஸித்தியைத் தரும் ஹேதுக்கள்.

அவதாரிகைளுடன் தாத்பர்யங்கள்— காமனென்னும் வைரியைக் குறிக்கும் வைரிபதத்தை முன் ச்லோகமுடிவில் ப்ரயோகித்தார். இந்த ச்லோகம் முதலிலேயே புத்திஸ்தமான காமபதத்தை வைப்பது கவனிக்கத்தக்கது. ‘யதாதிகரணம் ப்ரபு: யஜநதாந’ என்னும் ச்லோகமும் நெஞ்சில் ஓடுகிறது. பதவுரையிலேயே இங்கே அழகாக ஐந்து பொருள்களைச் சேர்த்திருப்பதைக் காட்டியிருக்கிறது. ‘ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரெனும்’ திருநாமத்தை அஹிதுண்டிகன் (பாம்பாட்டி) பரீக்ஷை செய்தான். அந்த தந்த்ரபரிபாஷைகளையும் இங்கே அமைக்கிறார். ‘க்ரஹம்’ பாம்பைப் பிடிப்பது, தம்ச ப்ரதிபந்தம்—கடிப்பதைத் தடுப்பது, கடிக்கும் சக்தியைப் பந்தம் செய்வது, ஓடுவதைப் பந்தம் செய்வது, கடித்தால் விஷத்தைப் போக்குவது முதலியன ஸித்திகள். விஷத்தைப்போக்கும் மூலிகைக்கு மூலமென்று பெயர். ‘மௌதி’ என்பதற்கு மூலம் மணி, மந்த்ரம், என்பது பொருள். ராஜ்யதந்த்ரத்தில் ஸேனைவீரருக்கு வேண்டிய ஆஹாரம் தனம் முதலியவைகளையெல்லாம் கொடுத்து ஸந்துஷ்டராய் வைத்திருக்கவேணும். ‘வயிற்றின் பேரில் ஸேனை நடக்கும்’ என்பர். ஆஹாரம், தனம், முதலியவைதைக் கொடுத்து எப்பொழுது ஸேனை உத்ஸாஹமாக இருக்கிறதோ, அப்பொழுது படையெடுக்கவேண்டும் என்றார் மநு. ராஜ்யதந்த்ரமும் ஸேனாதந்த்ரமும் நடத்திக்காட்ட உசிதமாயிருக்கவில்லை. அதிலும் பாண்டித்யத்தை ஸூசிக்கிறார். ‘நிகமஸித்தநரேந்த்ரநிரீக்ஷயா’ என்று ஸூர்யோதயத்தில் ஸாதித்ததைக் கவனிக்கவேணும். முன் ச்லோகத்தில் ஸ்வநிஷ்டை, உக்திநிஷ்டைகளை ஸூசித்தார். இங்கே ஆசார்யநிஷ்டையை ஸூசிக்கிறார். காமங்கள்—காமக்ரோதாதிகள், இவை ஆதிகள், மனோவ்யாதிகளான பீடைகள். கரணங்கள்—இந்த்ரியங்கள். க்ராஹ்யங்கள்—விஷயங்கள். மூலம்—என்பது ஜகந்மூலமான பரமாத்மா ஆதிமூலம். இவை எல்லாவற்றையும் வசப்படுத்தியிருக்கும் மந்த்ரஸித்தர்கள் ஆசார்யர்கள். மூலமந்த்ரபலத்தால் ஸித்தர்கள். அவர்கள் நமக்குத் தலைவரான நரேந்த்ரர்கள். ‘அஹீனம்’ என்பது ஹீனமல்லாத உத்தமபுருஷார்த்தமான மோக்ஷம். மோக்ஷம் தவிர மற்றதெல்லாம் ஹீனம். மோக்ஷத்தையும் அவர்கள் அநுக்ரஹசக்தி ஸித்திக்கச் செய்யும். (104)



ப்ரத்யும்நோ ஹ்யநிருத்தாத்மா ஸ்வநாம்நா மாநஸோதய: ।
வீர: கச்சித் விதந்வீத ஸ்த்ரீப்ராயமகிலம் ஜகத் ॥ ௧௦௫ ॥

ப்ரத்யும்நோ ஹ்யநிருத்தாத்மா ஸ்வநாம்நா மாநஸோதய: ।
வீர: கச்சித் விதந்வீத ஸ்த்ரீப்ராயமகிலம் ஜகத் ॥ (105)

(ப-ரை) ப்ரத்யும்ந: [ப்ரத்யும்ந:] - (1) மன்மதன், (2) ப்ரத்யும்னவ்யூஹரான பகவான், (3) ஏராளமான தனத்தை உடையவரும், அநிருத்தாத்மா [அநிருத்தாத்மா] - (1) அநிருத்தனைத் தன் பிள்ளையாக (புத்ரனென்னும் ஆத்மாவாக) உடையவனும், (2) அநிருத்தவ்யூஹராயும், (3) தடுக்கமுடியாத தைர்ய ப்ரயத்னங்களை உடையவரும், ஸ்வநாம்நா [ஸ்வநாம்நா] - (1) தன் பெயரினால், (2) தன் பெயரைக் கேட்டதாலேயே, மாநஸோதய: [மாநஸோதய:] - (1) மநஸிஜன், மனதிலுண்டாகிறவன் எனப் பெயருடையவரும், (2) விசுத்தமான மனதில் ப்ரகாசிப்பவரும், (3) மானத்தோடு கௌரவத்தோடு ஐச்வர்யப்பெருக்கையுடையவரான, வீர: கச்சித் [வீர: கச்சித்] - (1) தடுக்கக்கூடாத வீர்யத்தை உடைய ஒருவன், (காமன்) (1) கருடன் என்னும் பக்ஷியை வாஹனமாக உடையவரான ஓர் புருஷோத்தமன், (3) ஓர் மஹாவீரன், அகிலம் ஜகத் [அகிலம் ஜகத்] - ஜகத்முழுவதையும், ஸ்த்ரீப்ராயம் [ஸ்த்ரீப்ராயம்] - ஸ்த்ரீமயமாக, பெண்ணுடை உடுத்தியவராக, விதந்வீத ஹி [விதந்வீத ஹி] - செய்வானென்பது ப்ரஸித்தம்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— லோகவேதப்ரஸித்தனான புருஷோத்தமன் கண்ணன். பகவான், புருஷன் என்னும் சப்தங்கள் முக்கியமாக ஸர்வேச்வரனைச் சொல்லும். புருஷோத்தமன் விச்வத்திற்கெல்லாம் பதி. ‘பதிம் விச்வஸ்ய’. மற்றெல்லாரும் அவருக்குப் பத்நீஸ்தானம். “ஸ்த்ரீப்ராயமிதரத்

ஸர்வம்" என்ற பராசரவசனத்தை இங்கே நினைப்பது ஸ்பஷ்டம். மஹேச்வரனுடைய பௌருஷத்தை (ஆண்மையை)ப் பாதியாக்கினான் மன்மதன். 'அர்தாவசேஷிதமஹேச்வரபௌருஷாயம்'. பாதி பெண்ணாக்கிவிட்டான். ஆண்மக்களை 'அபலா' என்னும் பெண் மக்களுக்கு அடிமையாக்கவல்லவன். ப்ரத்யும்னன் மனஸிஜன் என்பது மன்மதன் பெயர்கள். மனதில் பிறக்கும் காமத்தைத் தடுப்பது அரிது. 'ஆத்மா வை புத்ரநாமாஸி' என்றது வேதம். 'அநிருத்தன், ப்ரத்யும்நனுடைய புத்திரன். அநிருத்தனைப் புத்திரனாக (ஆத்மாவாக) உடையவன் மன்மதன். தடுக்கக் கூடாத வீர்யத்தை உடையவன். பெருமானுடைய அழகில் ஈடுபட்டு ஆண்மக்களும் பெண்தன்மையை அடைவார். 'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரீ' ராமனென்னும் புருஷோத்தமன், தோராத தனிவீரன். 'ரா' என்ற அக்ஷரத்தைக் கேட்டதும் எதிரிகள் நடுங்குவர். அகம்பனன் பெண்ணுடை உடுத்தி ராமபாணத்திற்கு தப்பினான் என்பது அபயப்ரதானஸாரம். அர்ஜுனன் விஷயத்திலும் இப்படி தார்யோதனிகள் நடுங்கினார்கள். 'அகாரதீநி நாமானி அர்ஜுனத்ரஸ்தசேதஸ:'. ப்ரக்ருஷ்டமான தனத்தை உடையவன் தனஞ்ஜயன். வீரனை அரசனுக்கும் இதெல்லாம் பொருந்தும். 'விஜாநீதே' என்றுமோர் பாடம். மஹாவீரன் அகிலஜகத்தையும் ஸ்த்ரீப்ராயமாக மதிப்பான். வ்யூஹமூர்த்திகளான ப்ரத்யும்னரும் அநிருத்தரும் வாஸுதேவனே. மஹர்ஷிகளும் பெண்களாக அவதரித்துக் கண்ணனுடன் ராஸக்ரீடைகள் செய்து, ரஸபூர்த்தி அடைந்தார்கள். வாஸுதேவன் என்னும் புருஷன் விஷயத்தில்தான் 'ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம் ஜகத்ஸ்தாவரஜங்கமம்' என்று பாடப்பட்டது. (105)

𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑌾𑌤𑍍 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌮 𑌜𑍍𑌵𑌲𑌨𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌸𑌂𑌵𑌨𑌨𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥ ௧௦௬ ॥

ப்ரயுக்தம் மந்த்ரிபி: காலே பக்திபேதாத் புரஸ்க்ருதம் ।
ஸாம ஜ்வலனவக்த்ராணாமபி ஸம்வனனம் பரம் ॥ (106)

(பதவுரை) மந்த்ரிபி: [மந்த்ரிபி:] - (1) மந்த்ரிகளால், (2) வேத மந்த்ரங்களைப் பாடுபவர்களால், (3) மந்த்ரவித்துக்களான ஆசிரியரால். காலே [காலே] - (1) ஸரியான காலத்தில் முன்னதாக, (2) பஹிஷ்பவமானாதிப்ரயோககாலத்தில், (3) பஞ்சஸம்ஸ்காரானுக்ரஹகாலத்தில், ப்ரயுக்தம் [ப்ரயுக்தம்] - (1) உபயோகிக்கப்பட்டதும், (2) ப்ரயோகிக்கப்பட்டதும், (3) அநுக்ரஹிக்கப்பட்டதும், பக்திபேதாத் [பக்திபேதாத்] - (1) ப்ரீதிகௌரவத்தோடு, (2) ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதனம் என்னும் ஐந்து ஸாமபக்திகளோடு கூட்டி, (3) பரபக்தியோடு, புரஸ்க்ருதம் [புரஸ்க்ருதம்] - (1) புரஸ்கரித்துச் செய்யப்பட்டதும், (2) சோபிக்கச் செய்யப்பட்டதுமான, (3) முன்னிட்டதுமான, ஸாம [ஸாம] - (1) ஸாமோபாயம், (2) ஸாமகானம், ஸ்வரத்தோடு பாடும் மந்த்ரம், பகவானைப் பணிந்து வசப்படுத்தும் மந்த்ரம், ஜ்வலனவக்த்ராணாமபி [ஜ்வலனவக்த்ராணாமபி] - (1) எரியும் கொள்ளியும் முகத்தில் பொருந்தும் கொடியவரைக் கூட, (2) அக்நிமுகர்களான தேவர்களைக் கூட, (3) [illegible] என்றும் [illegible], ஸம்வனனம் பரம் [ஸம்வனனம் பரம்] - (1) [illegible] வசப்படுத்தக்கூடியது. (2) வசீகரணம் செய்யும் உபாயம்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— [illegible] ஸாமோபாயம் ச்ரேஷ்டம். ஸரியான காலத்தில் முன்பே மந்த்ரிகள் ப்ரயோகிக்கவேணும். விசேஷப்ரீதிகௌரவங்களைப் பாராட்டி அந்த உபாயத்தைப் பிரயோகிக்கவேணும். மனதைக் கவர்ந்து வசப்படுத்த அது நல்ல ஸாதனம். தேவர்கள் அக்னிமுகர்கள் (ஜ்வலனவக்த்ரர்கள்). அவர்களுக்குக் கொடுக்கும் ஹவிஸ்ஸை அக்னி வாங்கி, அவர் த்வாரமாக (அவர் முகமாக) அவர்களுக்குச் சேரும். ருத்ரருடைய நெற்றிக்கண் அக்னி. அவர் அங்காரவக்த்ரர். அவர் ஸாமகானப்ரியர்; ஸாமகானத்திற்கு வசப்படுபவர். சரணாகதிமந்த்ரங்கள் மந்த்ரஸித்தர்களால் காலத்தில் உபதேசிக்கப்பட்டு, விசேஷமான பக்தியோடு புரஸ்கரித்து, ஜபித்து அநுஸந்திக்கப்படுவது ஈச்வரனை வசீகரணம் செய்வதற்கு உத்தமமான உபாயம். 'மந்த்ரத்தை உச்சரிக்க எண்ணி நம் வாய் திறப்பதற்குள்ளே பரமபதவாசற்கதவு திறந்துவிடும்' என்பது ஸம்ப்ரதாயம். (106)

[illegible] ।
[illegible] ॥

விதௌ நீத்யா லப்தத்ருதிர் விநதாநந்தநோ த்விஜ: ।
நியம்யமாநை: ஸ்தாநேஷு புஜங்கைரபி பூஷ்யதே ॥ (107)

(ப-ரை) 𑌨𑍀𑌤𑍍𑌯𑌾 [நீத்யா] - (1) பூர்வமீமாம்ஸையின் ந்யாயங்களினுதவியைக்கொண்டு, (2) நீதிசாஸ்த்ரங்களைக்கொண்டு, (3) வாஹனமாக வஹனம் செய்வதால், 𑌵𑌿𑌧𑍌 [விதௌ] - (1) கர்மவிதிகளை அனுஷ்டிக்கும் முறை விஷயத்தில், (2) செய்ய வேண்டிய கார்யத்தில், (3) பெருமாளிடத்தில், 𑌲𑌬𑍍𑌧𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 [லப்தவ்ருத்தி:] - ஸந்தேஹம் முதலியதில்லாமல், பயமில்லாமல், தைர்யமுடையவனாய், ஸந்தோஷமடைந்தவராய், 𑌵𑌿𑌨𑌤𑌾𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 [விநதாநந்தன:] - (1) தனக்கு ஸொந்தமாக வசப்பட்ட ருத்விக்குகளைத் தக்ஷிணைகளால் ஸந்தோஷப்படுத்தும், (2) வணங்கினவர்களை ஸந்தோஷப்படுத்தும், (3) விநதையென்ற தாயாரை மகிழச்செய்யும், 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 [த்விஜ:] - (1) ப்ராஹ்மணர், (2) த்ரைவர்ணிகனான அரசன், (3) கருடன், 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌷𑍁 [ஸ்தாநேஷு] - (1) பசுக்களை விசஸனம்செய்வது முதலிய ஸ்தானங்களில், (2) அந்தந்த இடங்களில், பணிகளில், (3) தலை, காது, கை, மார்பு, இடுப்பு, கால் இந்த இடங்களில், 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑌮𑌾𑌨𑍈𑌃 [நியம்யமாநை:] - (1) நியமிக்கப்பட்ட, (2) கட்டளையிடப்பட்ட, சிறையிடப்பட்ட, (3) கட்டப்பட்டிருக்கும், 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑍈𑌰𑌪𑌿 [புஜங்கைரபி] (1) க்ரூரவ்யாபாரமான ஹிம்ஸையைச் செய்பவராலும், (2) ஸாமந்தர்களாலும், விடர்களாலும், (3) பாம்புகளாலும்கூட, 𑌭𑍂𑌷𑍍𑌯𑌤𑍇 [பூஷ்யதே] - (1) ஸ்தோத்ரம் பண்ணப்படுகிறார். (2) கொண்டாடப்படுகிறார். (3) அலங்கரிக்கபபடுகிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— யாகயஜமானன், அரசன், கருடன் ஆகிய மூவர்களுக்கும் இந்த ச்லோகம் பொருந்தும். 'நீதி' என்பது ஜைமினி மீமாம்ஸாந்யாயங்கள். அந்த ந்யாயங்கள் நன்றாய்த் தெரிந்தால் கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டிய முறையைப் பற்றி ஸந்தேஹம் இராது. எங்கே சாஸ்த்ரார்த்தம் தப்பிவிடுமோ என்ற பயமில்லை. ருத்விக்குகளுக்கு வேண்டிய த்ரவ்யத்தை தக்ஷிணைகொடுப்பதால், அவர்கள் ஸந்தோஷமாக யாகத்தை நிர்வஹிக்கிறார்கள். அவரவர்கள் ஸ்தானங்களில் அவரவர் கார்யங்களைச் செய்கிறார்கள். மந்த்ரப்பிழை தந்த்ரப்பிழை வருமோ என்ற பயமில்லை. சுக்ரநீதி, காமந்தகீயம் முதலிய நீதி சாஸ்த்ரங்களைப் பயிற்சி செய்திருப்பதால், ராஜ்யதந்த்ரத்தை நிர்வஹிக்கவேண்டிய நீதிமார்க்கப்படி நடப்பதால் பயமேயில்லாமல் ராஜ்யநிர்வாஹம் செய்கிறார். வணங்கினவரையெல்லாம் ஸந்தோஷப்படுத்துகிறார். சிற்றரசர்களை ஓரோர் ப்ரதேசங்களிலேற்படுத்தி, அவர்களாலும் ச்லாகிக்கப்படுகிறார். கருடன் ஜகத்ஸ்ரஷ்டாவான பெருமாளை வஹனம் செய்வதாலே ஸந்தோஷமடைகிறார். 'விநதை' என்னும் தன் தாயாருக்கு ஸந்தோஷத்தை யளிக்கிறார். தம் திருமேனியில் பலவிடங்களில் பாம்புகளைப் பூஷணமாகத் தரிக்கிறார். 'க்ரீடாகுண்டலிமௌளிரத்னக்ருணிபி:' என்று ஸங்கல்பஸூர்யோதயத்தில் கருடனுடைய சிரஸ்ஸிலுள்ள ஸர்ப்பங்களின் சிரோரத்னங்களின் காந்திகள் ஹாரத்திமங்களதீபம்போலிருப்பது வர்ணிக்கப்பட்டது.

𑌨𑍀𑌤𑌿𑌃 𑌪𑌰𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌸𑌤𑍀 𑌪𑌰𑌪𑍁𑌷𑍍𑌟 𑌧𑌾𑌤𑍁𑌃
𑌕𑌣𑍍𑌠𑍇 𑌯𑌦𑍇𑌷 𑌤𑌵 𑌪𑌞𑍍𑌚𑌮𑌮𑍁𑌚𑍍𑌚𑌕𑌾𑌰 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑍋𑌽𑌸𑌿 𑌬𑌲𑌿𑌪𑍁𑌷𑍍𑌟𑌕𑍁𑌲𑍈𑌰𑍍𑌯𑌥𑌾 𑌤𑍍𑌵𑌂
𑌦𑍂𑌰𑍀𑌕𑍃𑌤𑍋𑌽𑌸𑌿 𑌕𑌿𑌲 𑌤𑍈𑌃 𑌤𑌤 𑌏𑌵 𑌕𑌾𑌲𑍇 ॥

நீதி: பரம் த்வயி ஸதீ பரபுஷ்ட தாது:
கண்டே யதைஷ தவ பஞ்சமமுச்சகார ।
புத்ரீக்ருதோऽஸி பலிபுஷ்டகுலைர் யதா த்வம்
தூரீக்ருதோऽஸி கில தை: தத ஏவ காலே ॥ (108)

(ப-ரை) 𑌪𑌰𑌪𑍁𑌷𑍍𑌟 [பரபுஷ்ட] - காக்கைகளால் போஷிக்கப்பட்டு வளரும் குயிலே! 𑌏𑌷𑌃 [ஏஷ:] - இந்த, (படைத்த ப்ரஹ்மா), 𑌤𑌵 [தவ]-உன்னுடைய, 𑌕𑌣𑍍𑌠𑍇 [கண்டே]-தொண்டையில், 𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 [பஞ்சமம்]-பஞ்சமஸ்வரத்தை, 𑌯𑌦𑌾 𑌉𑌚𑍍𑌚𑌕𑌾𑌰 [யதா உச்சகார] - ப்ரீத்து உபதேசித்து அமைத்து வைத்தது என்பது, 𑌤𑍍𑌵𑌯𑌿 [த்வயி] - உன்விஷயத்தில், 𑌧𑌾𑌤𑍁𑌃 [தாது:] - ஸ்ருஷ்டிகர்த்தாவுடைய, 𑌸𑌤𑍀 [ஸதீ] - நல்ல 𑌨𑍀𑌤𑌿𑌃 𑌪𑌰𑌂 [நீதி: பரம்] - உத்தமதந்த்ரமாகும். 𑌬𑌲𑌿𑌪𑍁𑌷𑍍𑌟𑌕𑍁𑌲𑍈𑌃 [பலிபுஷ்டகுலை:] - காக்கைகளுடைய கூட்டங



189913

களால், [illegible] [புத்ரீக்ருத: த்வம்] - முன்பு குழந்தையென்று வளர்க்கப்பட்ட நீ, [illegible] [தத ஏவ காலே] - அந்தக்காலத்திலேயே, [illegible] [யதா ஶ்ரீக்ருதோரஸி கில] - நீ ஶ்ராத் ஶ்ரத்தப்படுகிறாய் என்கிற காரணத்தாலேயே, (அதை அவருடைய உயர்ந்த தந்த்ரம் என்று சொல்லவேண்டும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்—'ஸ்த்ரீகளுக்கு இயற்கையாகவே (ஒருவரும் சிக்ஷிக்காமலேயே) நல்ல தந்த்ரங்கள் தெரியும்; பெண் பக்ஷிகளுக்கும் இப்படித் தந்த்ரம் தெரியும்; ஆகாயத்தில் பறக்கச் சக்திவரும் வரையில் தங்கள் குஞ்சுகளைக் குயில்கள் வேறு பக்ஷிகளை (காக்கைகளை)க் கொண்டு போஷணம் செய்விக்கின்றன' என்று சாகுந்தளத்தில் துஷ்யந்தர் பேசினார். 'வஸந்தகாலம் வந்துவிட்டால் காகம் காகமே; குயில் குயிலே' என்பர். இரண்டும் ஒரேநிறம்; வேற்றுமை வெளிப்படையாய் உடனே தெரியாது. வாயைத் திறந்து கூவினால் வேற்றுமை வெளிப்படும். இப்படி வெளி ஒற்றுமையை ஈச்வரன் ஏற்படுத்தினது, காக்கையை ஏமாற்ற உபயோகப்படுகிறது. தன்குஞ்சு என்றே ஏமாந்து பெற்ற குழந்தையாகவே வளர்க்கிறது. தனக்குக் கிடைக்கும் வாயஸபிண்டபலிகளைத் தானுண்ணாமல், கொண்டுவந்து கொடுக்கிறது. 'பலிபுஷ்ட' என்பது இதை ஸூசிக்கிறது. குயில் குஞ்சு ஆகாசத்தில் பறக்கத் தொடங்கிக் கூவுகையில், உடனே ஜாதிவேற்றுமையை அறிந்து, எல்லாக் காகங்களும் ஒன்றுசேர்ந்து வளர்த்த இளங்குயிலைக்கிட்டவாமல் விலக்கிவிடுகின்றன. ஜாதிக் கட்டுப்பாடாக எல்லாம் கூடி விலக்குகின்றன. ஆயிரம் காக்கைக் கூட்டம். ராஜ்யதந்த்ரத்திலும் 'சாரர்கள்' மாறு வேடம் பூண்டு, அந்தந்த தேசத்தாரைப்போலவே இருப்பார்கள். தங்களுக்கு விஜாதீயமான அந்தத் தேசபாஷையைப் பேசுகையில், வேறு ஊரான் என்று பாஷாவ்யவஹாரம் ஸ்வரம் முதலியதால் வெளிப்பட்டுவிடும். குயில்குஞ்சைக் காக்கைக் குஞ்சென்று நினைப்பதற்கு உருவத்தினால் ஒற்றுமை காரணம். அந்த ப்ராந்தி நீங்குவதற்குக் குரல் வேற்றுமை காரணம். எத்தனை நாள் பிள்ளை என்றே வளர்த்தாலும், பிறவிஜாதி வேற்றுமை தெரிந்ததும், விரட்டிவிடுகின்றன. ஜாதிஅபிமானம் பெரிது. (108)



[illegible]

விபுதமஹிதே மேரௌ ஐராவண: கரட முஹு:;
கஷது கரடம் கண்டூலம் ஸ்வம் க்ஷரந் மதகர்தமம் I
பஜது ச தடக்ரீடாம் பாதைர் விஸந்தி ததா
(பீடாபிஸந்திரஸௌ) த்ருடம்
ந ச மலினதா நாபி க்ஷோப: க்ஷமாப்ருதி ஸம்ப்ரம: II

(பரை) [illegible] [விபுதமஹிதே] - தேவர்களால் பூஜிக்கப்பட்ட, (வித்வான்களால் பூஜிக்கப்பட்ட,) [illegible] [மேரௌ] - மஹாமேருமலையில், (மஹாமேருவைப் போன்ற மஹாவித்வானிடம்), [illegible] [ஐராவண:]-ஐராவதமெனும், (திங்நாகனை), [illegible] [கரட] - யானை, (கரட்டுவாதம் செய்யும் நாஸ்திகன்), [illegible] [முஹு:] - பல்கால், [illegible] [மதகர்தமம்] - மதஜலச் சேற்றை, (கலக்கமுள்ள விதண்டாவாதச் செருக்கை), [illegible] [க்ஷரந்] - பெருகி வழியவிட்டுக்கொண்டு, [illegible] [கண்டூலம்]-அரிசொறியாடுகூடிய, (தினவோடுகூடிய), [illegible] [ஸ்வம்கரடம்]-தன்கன்னத்தை (மண்டையை, மூளையை), [illegible] [கஷது] - தேய்க்கட்டும்- [illegible] [பாதை:] - பாதங்களால், [illegible] [விஸந்தி] - மூட்டுகள் விரிந்துபோகக்கூடியபடி, [illegible] [ததா த்ருடம்] - அத்தனை கெட்டியாக, [illegible] [தடக்ரீடாம்] - தந்தத்தை முட்டி மலைத்தடத்தை முட்டி விளையாடுவதை, [illegible] [பஜது ச]-நிரந்தரம் செய்யட்டும். (இதனால்,) [illegible] [க்ஷமாப்ருதி] - மலைக்கு, (பொறுமையுடைய மஹாவித்வானுக்கு,) [illegible] [மலினதா ந ச] - மாலிந்யம், கலக்கம், அழுக்கு உண்டாவதில்லை. [illegible] [நாபி க்ஷோப:] - அதிர்ச்சி, குழப்பம் உண்டாவதில்லை. [illegible] [நாபி ஸம்ப்ரம:] - துளி பரபரப்பும் உண்டாவதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— நிறைகுடங்களான மஹாவித்வான்கள் முன்னிலேயில், முரடான நாஸ்திகவாதிகள் எத்தனை இரைச்சல் போட்டு தர்க்கித்தாலும், அவர்களுடைய கலக்கமான சொற்ப்ரவாஹம் பெருகியோடுமேயல்லாது, அதனால் ஒரு கலக்கமுமுண்டாகாது. காட்டாற்று வெள்ளம் கல்லேயும் மண்ணையும் உருட்டி இரைச்சல் போட்டு வந்து, ஒரு நிமிஷத்தில் ஓடிப்போகும்; நிலேயாய் நிற்காது. ப்ரதிவாதிகள் வாதிக்கையிலேயே தானுகவே அவர்களுடைய கலுஷங்கள் வெளிப்பட்டுவிடும்; மதஜலதுர்கந்தம்போல துர்வாஸனே வெகுதூரம் வாஸிக்கும். அவர்கள் அஹங்காரம் கபோலங்களிலிருந்து மதயானையின் மதஜலம்போல பெருகி வெளிவருமேயல்லாது, அவர்கள் கபோலங்களிலிருந்து நல்லயுக்திகள்வரவேவராது. திக்கஜகபோலத்திலிருந்து மதஜலம் பெருகுவதுபோல, கபோலத்திலிருந்து அவர்கள் அஹங்கார (மத) வாதங்கள் பெருகும். 'ஸ்வம்' அவர்களுக்கு மட்டும் தனிப்பட்டதும், மற்ற சாஸ்த்ரக்காரர் ஒருவரும் ஒப்பாததுமான யுக்திமார்க்கங்கள் 'ஸ்வகபோலமாத்ரகல்பிதமான யுக்திகள்' என்பது கருத்து. 'கரட' என்பது நாஸ்திகவாதியான கரட்டுவாதக்காரனேயும் சொல்லும் என்பர். திங்நாகரென்ற மாத்யமிகரைப்பற்றி ஸௌர்யோதயத்தில் இரண்டாமங்கத்தில் வர்ணிக்கப்பட்டுளது. காளிதாஸர் "திங்நாகாதிகளான திக்கஜங்களுடைய, ஸ்தூலமான ஹஸ்தங்களின் கர்வப்ரயுக்தமான ஆட்டுதல்களேப் பரிஹரிக்க வேண்டும்" என்றார். 'தந்தாதந்தி' என்று தந்தங்களால் முட்டிமுட்டிப் போர்புரிவதை ஸௌர்யோதயம் பேசிற்று. பெருங்கைகளே ஆட்டுவதே அதிகம். கைபாட்டமும், காலாட்டமும் வாதத்தில் மிகுதி. அவர்கள் யுக்திகளும் பரிஹஸிக்கத்தக்கனவே யாகையால், அதை விளையாட்டு(க்ரீடை) என்றே சொல்லலாம். அதற்குப்பதில் கூடவேண்டியதில்லே. 'என் தாயார் மலடி' என்பதற்குக் கண்டனம் வேண்டாததுபோல. 'பரமாணுவுக்கும் மஹாமேருவுக்கும்' உள்ள பேதம்போல, அரைக்கால் படிப்புக்காரருக்கும் பூர்ணவித்வான்களுக்கும் தாரதம்யம் என்பர். ஐராவதம் முதலிய திக்கஜங்கள் தந்தங்களால் முட்டி விளையாடும்; சொறி நிறைந்த கன்னங்களே மலேத்தடத்தில் உறைக்கும்; மதஜலமும், சொறி ஸன்தண்ணியும் பெருகும். அதனுல் மலேக்குக் காலுஷ்யம் வாராது, கஜத்தின் சொறித்தினவடங்கும். ப்ரதிவாதம் செய்பவரின் ஜௌத்ததினவு கெடும்; தங்கள் பக்ஷம் தப்பென்று அவர்களுக்கே தெளிவு ஏற்படும். 'ஸ்வம்' என்பதற்கு இதுவும் கருத்து. 'ஸ்வம் கண்டூலம்' தங்கள் தினவைப் போக்கிக்கொள்ளுவர். 'க்ஷமாப்ருதி' என்று மலேயைச் சொன்னது ஸார்த்தகம். பொறுமையை உடையவரிடம் துர்பலரான எதிரிகள் எத்தனை எதிர்த்து வந்தாலும், அவர்கள் கொழுப்பு அடங்குமேயொழிய, பலிஷ்டனை ராஜாவுக்கு யாதொரு தோஷமும் உண்டாகாது. 'பீடாபிஸந்தி: அலெள' என்றும் பாடம். அப்போது (மலேயை முட்டி விளையாடும்போது, மலேக்குப் பீடையுண்டாக்கவேண்டும் என்ற எண்ணத்தோடே முட்டினுலும்) என்பது பொருள். விளையாட்டு முட்டோடு நிற்காமல், வினை முட்டாகவே முட்டட்டும், அதனுலென்ன ? (109)



ஒன்பதாவது நீதிமத்பத்ததி முற்றிற்று.

## ப்த்தாவது வதான்ய பத்ததி:.

𑌆𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌦𑌶𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑌾𑌦𑌰𑍍𑌶 𑌇𑌵 𑌸𑌜𑍍𑌜𑌨𑌃 ।
𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌰𑌕𑍍𑌤𑌮𑌰𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑌃 ॥௧௧0॥

ஆபிமுக்யதசாமாத்ராதாதர்ச இவ ஸஜ்ஜன: ।
சீக்ரம் ரக்தமரக்தம் ச க்ருஹ்ணாதி ஸ்வப்ரஸாதத: ॥ (110)

(படை) 𑌆𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌦𑌶𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 [ஆபிமுக்யதசாமாத்ராத்] - நெருங்கி எதிரே வரும் தசையை மட்டும்கொண்டு, 𑌸𑌜𑍍𑌜𑌨𑌃 [ஸஜ்ஜன:] - சான்றோராயிருப்பவர், (ஸௌஜனஸார்வபௌமமான ஈச்வரன்), 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑌃 [ஸ்வப்ரஸாதத:] - தன்னுடைய ஸ்வச்சமான அநுக்ரஹபுத்தியாலேயே, 𑌰𑌕𑍍𑌤𑌂 [ரக்தம்] - உள்ளன்புள்ளவனேயும், (சிகப்பானதையும்,) 𑌅𑌰𑌕𑍍𑌤𑌂 𑌚 [அரக்தம் ச] - உள்ளன்பு இல்லாதவனேயும், (சிகப்பில்லாததையும்,) 𑌆𑌦𑌰𑍍𑌶 𑌇𑌵 [ஆதர்ச இவ] - கண்ணுடியைப்போல, 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 [சீக்ரம்] - விளம்பமில்லாமல், உடனே, 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 [க்ருஹ்ணுதி] - தன்னுள்ளே ஏற்றுக்கொள்ளுகிறர்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தனதான்யம் படைத்தவர் அதைத்தானம் செய்யும் ருசியுடையவராயிருந்தால் தான் ஸஜ்ஜனராவார். ஸர்வஸ்வத்தையும் தானம் செய்யும் சீலம் பரமாத்மாவுடையது. அவருடைய பக்தர்களுக்கும் ஸ்வாமி சீலத்தைப்போலவே சீலமமைந்திருக்கும். தனம் தான்யம் முதலியது ஸுகத்தைக் கொடுப்பது. ஸுகஸாதனம் ஸ்வயம் ஸுகமன்று. ஆனந்தம் என்பது ஸ்வயம் ஸுகம். பரமாத்மா ஆனந்தஸமுத்ரம். அவரை ஸாக்ஷாத்தாக ஜ்ஞானபூர்வமாக அணைவதுதான் உத்தமானந்தம். 'அணைவதரவணைமேல்'. அவருக்குள் புகுந்து அவரோடு பிரியாத ஸம்ச்லேஷம் பெறுவதுதான் எல்லையற்ற ஆனந்தமெனும் மோக்ஷம். 'ஒடுங்க அவன் கண்', 'எல்லையிலந்நலம் புல்கு பற்றற்றே' என்பது ப்ரஹ்மானந்தத்தில் ஆழ்ந்தவரின் உபதேசம். 'ததோ மாம் தத்வதோஜ்ஞாத்வா விசதே ததநந்தரம்' என்பது கீதை. (என்னை உள்ளபடி அறிந்து என்னுள்ளே புகுகிறான்.) 'அவருக்குள் புகுவது அவருடைய ப்ராப்தி' என்பது தாத்பர்யசந்த்ரிகை. 'அவிபாகேன' பிரியாமல் ஒன்றுபோல் அநுபவம். 'தான்' என்பதும் அவனுள் ஒடுங்கி, அவன் விசேஷ்யமாகவும், உயிராகவும், தான் விசேஷணமாகவும் குணகுணிகளைப் போல் தனித்திருப்பே அஸாத்யமாகப் பிரிவிலாக்கலவி கலந்து நிற்கும் நிலை. 'சுத்த ஸ்வச்சமான கண்ணாடிக்குள் நாம் ப்ரதிபிம்பிக்கும்போது, நாமே கண்ணாடிக்குள் நுழைந்து சொருகிவிடுவது போலிருக்கும். கண்ணாடிக்கு எதிரே அபிமுகமாக ஒரு பொருள் நெருங்கிய தக்ஷணமே சுத்தமான கண்ணாடி தானாகவேதான் தெளிவாய் சுத்தமாயிருக்கும் காரணத்தைக்கொண்டு, தன்னிடம் அபிமுகமாக வந்ததென்கிற ஒரு காரணத்தைக் கொண்டே தன்னுள்ளே அதை க்ரஹித்துக்கொண்டு உள்ளே தரிக்கிறது. அபிமுகமாக நெருங்கிய பின், ஒரு க்ஷணம்கூட தாமதிப்பதில்லை. தக்ஷணமே தன்னுள்ளே ஏற்றுக்கொண்டு தரிக்கிறது. அபிமுகமாக வரும் பொருள் ராகமுடையதோ, ராகமில்லாததோ என்று ஆலோசிக்கிறதில்லை, விசாரிக்கிறதில்லை, மீமாம்ஸை செய்கிறது இல்லை. "ரக்தம்—சிகப்பு, அரக்தம்—சிகப்பில்லாதது, எல்லாவற்றையும் கண்ணாடி உடனே உட்கொள்ளுகிறது. கண்ணாடியில் அழுக்கிருந்தால் நன்றாகப் ப்ரதிபலனமேற்படாது." கண்ணாடியில் ப்ரஸாதம் (தெளிவு) பூர்ணமாயிருக்கவேணும். தன் ப்ரஸாதமே



முக்கியமான ஹேது. த்ருஷ்டாந்தத்தில் எல்லா அம்சங்களிலும் ஒற்றுமையை அபேக்ஷிக்கலாகாது. நம்முடைய ஆபிமுக்யத்தையே எதிர்பார்க்கிறார் என்றும், அபிமுகமாக நெருங்கிய தக்ஷணமே ஒரு க்ஷணம்கூடத் தாமதியாமல், தன்னுள்ளே க்ரஹித்துக் கொள்ளுகிறார் என்றும், தன்னிடம் காலுஷ்யம் (கலக்கம்) இல்லாமல் தான் ப்ரஸன்னனாயிருப்பதே உடனே க்ரஹிப்பதில் முக்கிய காரணம் என்றும் காட்டுவதில் திருவுள்ளம். 'போடோக்ராப்' பிடிக்கையில் உள்ளேயே அப்படியே பிம்பம் விழுந்து ஒட்டிவிடுகிறது. ஸஜ்ஜனராயிருப்பவர் தம்மிடம் அர்த்திகள் நெருங்கியதும், அவர்களுக்கு ஸர்வஸ்வதானம் செய்வர். தங்கள் விபவத்தையெல்லாம் அர்த்தியின் ஸொத்தாக நினைப்பர். 'தவ விபவம் அர்த்திஸ்வம் அமதா:' (உம்முடைய விபவத்தையெல்லாம் அர்த்திகளுடைய ஸொத்தாக நீர் அவர்கள் நெருங்கும் க்ஷணத்திலேயே நினைத்துவிட்டபடியால், அவர்கள் பின்பு தேஹி என்று கேட்கும்பொழுது, உம்முடைய ஸொத்தே இல்லாமல் அவர்கள் ஸொத்தாய்விட்டதால், உமக்கு ஔதார்யகுணம் அடியோடு ஸித்திக்காது) என்று ஸ்ரீரங்கராஜஸ்தவம். ஆஜ்ஞையை மீறிய தால் ஸ்வச்சக்கண்ணாடிபோன்ற ஈச்வரனுக்கும் கோபமென்ற காலுஷ்யமுண்டு. அந்தக்கலுஷத்தை ஆபிமுக்யமாத்ரத்தால் போக்கி அவரைப் ப்ரஸன்னராக்கலாம். கண்ணாடி விஷயத்தில் முன்பு அழுக்கைச் சுத்தம் செய்துவிட்டு, பின்பு எதிரே அபிமுகமாக வரவேண்டும் என்று இரண்டு உண்டு. பெருமாள் விஷயத்தில் ஆபிமுக்யமே அழுக்கை எடுத்துவிடும் என்ற ஏற்றமுளது. (110)

அப்யநாவர்ஜிதா: ஸ்வேந ஃபலபாரேண (ராகேண) ஸந்நதா: ।
அல்பகைரபி க்ருஹ்யந்தே ஸாது ஸந்தாந சாகிந: ॥௧௧௧॥

அப்யநாவர்ஜிதா: ஸ்வேன பலபாரேண (ராகேண) ஸந்நதா: |
அர்பகைரபி க்ருஹ்யந்தே ஸாது ஸந்தான சாகின: || (111)

(ப-ரை) அநாவர்ஜிதா அபி [அனுவர்ஜிதா அபி] - பழம் வேண்டியவரால் வளைத்துத் தாழ்த்தப்படாவிடினும், (பலன்கள் வேண்டியவரால் ஆராதிக்கப்படாவிடினும்,) ஸ்வேந [ஸ்வேன]-தங்கள் ஸொந்தமான, ஃபலபாரேண [பலபாரேண]-பழச்சுமையால், (ராகேண பலராகேண - பிறர் பேறே

தப்பேறுகக்கொண்ட அவாவினால்,) ஸந்தா: [ஸந்தா:] - வணங்கித் தாழ்ந்தவர்களாய், ஸாதுஸந்தாநசாகிந: [ஸாது ஸந்தாநசாகின:] - ஸாதுக்களான கல்பகவ்ருக்ஷங்கள், அர்பகைரபி [அர்பகைரபி] - குழந்தைகளாலும், (அறியாதவரா லும்,) க்ருஹ்யந்தே [க்ஹ்யந்தே] - க்ரஹிக்கப்படுகிறார்கள், (பற் றப்படுகிறார்கள்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸாதுக்களுக்கு திவா ஸவ்ருக்ஷம், அர்த்திகளுக்குக் கல்பகம் என்று பெருமாளை வர்ணிப் பர். 'தருக்கள் பலோத்கமங்களால் வணங்கிக் கைக்கெட்டும்படி தாழும்; இது பரோபகாரிகளின் ஸ்வபாவம்' என்று சாகுந்தளம். அடிக்கும் வெயிலெல்லாம் தலைமேல், ஆச்ரிதருக்குக் குளிர்ந்த நிழ லையே கொடுக்கும். ஒரு பழத்தையேனும் மரம் உண்ணாது, பழம் சுமரவே உடனே குனிந்து கைக்கெட்டச் செய்யும். குழந்தைக ளும் எட்டிப் பிடிக்கலாம். 'ஆவர்ஜனம்' என்பது—வளைப்பதை யும், ப்ரார்த்தனையால் வசப்படுத்துவதையும் சொல்லும். மடியில் மாங்காய்களைக் கட்டிக்கொண்டு குழந்தைகளை எடுத்துக்கொள்ளுங் களென்று சொல்லும் தாய்போல. மரம் கொடுப்பது பழம்; ஸா துக்கள் கொடுப்பது ஸ்வஸாம்யம். (111)

நிர்முக்தபவநக்ஷேத்ரா: ஸ்யு: ஸதாகதிநிர்வ்ருதா: ।
ப்ராப்தே பயவிபர்யாஸே போகின: கலு யோகின: ॥

நிர்முக்தபவநக்ஷேத்ரா: ஸ்யு: ஸதாகதிநிர்வ்ருதா: l
ப்ராப்தே பயவிபர்யாஸே போகின: கலு யோகின: ll (112)

(ப-ரை) நிர்முக்தபவநக்ஷேத்ரா: [நிர்முக்தபவனக்ஷேத் ரா:] - க்ருஹம்போன்ற சட்டைகளை கழற்றியெறிந்த, (க்ருஹத் தையும் பூமிகளையும் துறந்த,) ஸதாகதிநிர்வ்ருதா: [ஸதாகதி நிர்வ்ருதா:]- காற்றைச் சாப்பிடும், (வாயுபக்ஷராயிருக்கும் ஸத் துக்கள் வருகையில் ஸந்துஷ்டராய்), (உள்ள) போகின: [போ கின:] ஸர்ப்பங்கள், பயவிபர்யாஸே [பயவிபர்யாஸே] - பயமென்னும் சித்தவிகாரம், ப்ராப்தே [ப்ராப்தே]- உண்டான போது, யோகின: கலு ஸ்யு: [யோகின: கலு ஸ்யு:] - எதிர்த்துச் சீறும், யோகின: [யோகின:] - யோகிகள், பய



விபர்யாஸே [பயவிபர்யாஸே] - எல்லாவற்றையும் இழந்து ஆபத்பயமடைந்தவர், ப்ராப்தே [ப்ராப்தே]- அதிதியாக வந்த பொழுது, போகின: கலு ஸ்யு: [போகின: கலு ஸ்யு:] - அவர்களுக்கு அன்னமிட்டும், பாகவதசேடம் புனிதமென்று தாமும் உண்பர். ப்ராப்தே பயவிபர்யாஸே [ப்ராப்தே பயவி பர்யாஸே] - ப்ரளயம்போன்ற ஆபத்து வந்தாலும், போகின: ஸ்யு: [போகின: ஸ்யு:] - ஸுகிகளாகவே இருப்பர். பய என்னும் இரண்டு எழுத்துக்களைப் பரிவர்த்தனை செய்து மாற் றினால், போகி யோகியாகும்; யோகி போகியாகும் என்றும் வேடிக்கை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— பழங்கள் சுமை நிரம் பிய வ்ருக்ஷங்கள் நெருங்கி வருபவருக்குப் பறிக்கும்படி தாழ்கின் றன என்பர். எல்லாவற்றையும் துறந்தவரும், தாங்கள் வாயு பக்ஷராகக் காற்றையே உண்பவராயும், நிஷ்கிஞ்சனராயிருந்தா லும், ஆபந்நரான ஸாதுக்கள் வந்தால், வஸ்துக்களைச் சேகரித்து ஆதித்யம் செய்து, தம்முடைய வாயுபக்ஷவ்ரதத்தையும் விட்டு அவர்கள் புக்தசேஷத்தை சுத்திக்காக புஜிப்பர். பாரத்வாஜரைப் போன்ற யோகிகள் யோகமஹிமையால் யோகிகளைப்போல் அரும்பெரும் விருந்தளிப்பர். என்ன பயம் வந்தாலும் ஸுகிகளா கவேயிருப்பர். 'நிர்முக்த' துறக்கப்பட்ட, கழற்றியெறியப்பட்ட. க்ஷேத்ரமென்பதற்கு சரீரம், பூமியென்று இரண்டு பொருள்களை யும் கொள்ளலாம். வீட்டையும் விட்டவர், தேஹத்தையும் (தேஹாபிமானத்தையும்) விட்டவர். முன்பு உடலாயிருந்ததைக் கழற்றி சட்டையுதிர்த்த பாம்பு அந்த சட்டையில் எப்படி தேஹாபிமானம் செய்வதில்லையோ, அப்படியே தன் தேஹத்தில் அபிமானலேசமில்லாது ஞானி யிருக்கவேணும் என்றது ப்ருஹ தாரண்யகம். அதையுமிங்கு நினைக்கிறார். ஆபத்கதராய் வந்த வருக்கு ஆதித்யம் செய்யாமல் விடார். ஸத்துக்கள் வந்ததில் ஸந்தோஷம் அதற்குக் காரணம்— 'ஸத்துக்களின் ஆகதியால் ஹ்ருஷ்டராகி'வேண்டிய த்ரவ்யஸம்பாரங்களைச் சேகரித்து விருந் தளிப்பர்; சேஷத்தைத் தாமுமுண்பர். ஸர்ப்பங்கள் பொந்தை விட்டு வெளியே வந்திருக்கும்; சட்டையையும் கழட்டியிருக்கும். காற்றடிக்கையில் காற்றையுண்ணும்; பக்கத்தில் எவரேனும்

நெருங்கி அதனால் மனதில் பயமுண்டானால், உடனே படத்தை விரித்துச் சீறியெதிர்க்கும். 'போகம்' என்பது ஸம்ஹாரத்தையும் சொல்லும். எதிர்த்துக்கடிக்க ஸம்ஹாரம் செய்யும் 'போகிந: கலு போகிந:' என்றுமோர் பாடம். (112)

ஸர்வேஷாமுத்தராமாசாம் தநதோ ய: ப்ரதீ(பரீ)க்ஷதே ।
ஸத்யம் மநுஷ்யதர்மைவ ஸது புண்யஜநேச்வர: ॥கக௩॥

ஸர்வேஷாமுத்தராமாசாம் தநதோ ய: ப்ரதீக்ஷதே (பரீக்ஷதே) ।
ஸத்யம் மநுஷ்யதர்மைவ ஸது புண்யஜநேச்வர: ॥ (113)

(பதவுரை) ய: [ய:] - எந்த, தநத: [தநத:] - தனம் முதலியதை வழங்கும் வள்ளல் (குபேரன்), ஸர்வேஷாம் [ஸர்வேஷாம்] - எல்லா அர்த்திகங்களுடைய (எல்லாவற்றிற்கும்), உத்தராம் [உத்தராம்] - மிகவுமுயர்ந்த (வடக்கான), ஆசாம் [ஆசாம்] - ஆசையை (திக்கை), ப்ரதீக்ஷதே [ப்ரதீக்ஷதே] - ஆவலுடன் எதிர்பார்க்கிறாரோ, ஸ: [ஸ:] - அவர், மநுஷ்யதர்மைவ [மநுஷ்யதர்மைவ] - மநுஷ்யரூபராயிருந்தும் (மநுஷ்யதர்மா என்ற பெயரையுடையவராயிருக்கையிலேயே, மநுஷ்யதர்மா என்று குபேரனுடைய பெயர்), புண்யஜநேச்வரஸ்து [புண்யஜநேச்வரஸ்து] - புண்யஜநங்களுக்கு ஈச்வரனுமிருக்கிறாரென்பது (புண்யஜநரென்று பெயர்கொண்ட யக்ஷர்களுக்கு ராஜாவாகவுமிருப்பது), ஸத்யம் [ஸத்யம்]-உண்மையே. 'பரீக்ஷதே' [பரீக்ஷதே] என்றும் பாடம்- உயர்ந்த ஆசையைப் பரீக்ஷிக்கிறாரென்பது பொருள்,

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தனதான்யங்களை அத்யுதாரமாய் வழங்கும்படி பாக்யம் பெற்ற குபேரன் போன்ற ஸ்ரீமான்களைப் புகழ்கிறார்- குபேரனிலும் அதிகப்பணம் படைத்தவரில்லை. தனத்தை உதாரமாக தானம் செய்பவரில் அவரினும் மிக்காரில்லை. உதாரஸார்வபௌமரான ராமனுக்கு ருஷி தனதனென்றார் குபேரனை உவமையாகக் கூறினார். 'தனதேந ஸம: த்யாகே' தனவான்கள் குபேரனைப்போலிருக்க ஆசைப்படவேணும், அவனைப்போல் தனதனுமிருக்கவேணும். அர்த்திகள் எத்தனை எத்தனை உயர்த்தியான ஆசைகளை ப்ரார்த்திக்கிறார்களோ அத்தனைக்கத்தனை ஸந்தோஷம். ஸர்வோத்தரமான



(எல்லாத்துக்கும் மேற்பட்ட) ஆசைகளை அவர்கள் ப்ரார்த்திக்க வேண்டுமென்று ப்ரதீக்ஷிக்கிறார். அவர்கள் சொல்லுவதற்கு வெட்கப்பட்டால் பல கேள்விகளால் அவர்களுக்கு என்னென்ன உயர்ந்த ஆசையிருக்குமென்று பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளுகிறார். 'உத்தர' என்பதற்கு 'வடக்கு', 'ச்ரேஷ்டம்' என்று இரண்டு பொருள். 'ஆசை' என்பதற்கு 'திக்கு' என்றும் பொருள். 'எல்லாத்திற்கும் வடக்கான', 'எல்லாத்திற்கும் மேல்பட்ட' என்று 'ஸர்வோத்தர' என்பதற்கு இரண்டு பொருள்கள். 'குபேரன்' எல்லாத்திற்கும் வடக்கான திக்கிலிருக்கிறார். ஸர்வோத்தரமான ஆசையை ப்ரதீக்ஷிக்கிறார், பரீக்ஷிக்கிறார். அவருக்கு 'மநுஷ்யதர்மா' என்றும் 'புண்யஜநேச்வரர்' என்றும் பெயர்கள். மநுஷ்யரைப்போல மீசையும் ரோமமும் அவருக்கு உண்டு. தாதாக்களான தனிகர்கள் குபேரனைப்போல உதாரர். அவர்கள் மநுஷ்யசரீரமாகவிருந்தாலும் அவர்கள் புண்யஜநேச்வரர்(குபேரனென்னும் யக்ஷராஜனுவார்). சப்தங்களால் மேலுக்கு விரோதங்காட்டும் விரோதாபாஸாலங்காரம். மேலுக்கு சப்த விரோதம்; உண்மையில் விரோதமில்லை. 'மநுஷ்யர்களுக்கும் தேவர்களுக்கும் சாந்தமான வடக்கு திக்கு உரியது' என்று வேதம். குபேரன் மநுஷ்யர்போன்ற ஆகாரமுடையவராயினும் பலசாலிகளான யக்ஷராக்ஷஸர்களை அடக்கியாளும் பலமுடையவர். 'புண்யஜநர்' என்று ராக்ஷஸருக்குப் பெயர். செவ்வாய்க்கிழமைக்கு மங்களவாரமென்பதுபோல் விபரீதப்பெயர். 'கோகுலத்தை விட்டு, கோபிகைகளை விட்டு வடமதுரைக்கு க்ருஷ்ணராமரை இழுத்துக்கொண்டுபோகும் க்ரூரருக்கு அக்ரூரரென்று பெயர் இருப்பது அந்யாயம்' என்று கோபிகைகள் கூக்குரலிட்டார்கள். க்ருஷ்ணனைப் பிரிப்பதுகூட அஸஹ்யமாயில்லை; அவரைப் பிரிக்கும் க்ரூரன் அக்ரூரன் என்று பேர் படைத்தது அவர்களுக்கு ஸஹிக்கவில்லை. யாதவாப்யுதயத்தில் கோபிகைகள் இந்த விபரீதப்பெயருக்கு ஓர் த்ருஷ்டாந்தம் கூறுகிறார்கள். 'ராக்ஷஸர்களுக்குப் புண்யஜனரென்று பெயரிருக்கிறதே, அதுபோல் இதுவுமோர் அந்யாயம்' என்கிறார்கள். 'ஸர்வோத்தர' என்பதற்கு இரண்டு அர்த்தங்களையும்வைத்து விரோதம் காட்டுவது ஸ்வாமியின் ரீதி. கோதாஸ்துதியில் 'உன் அவதாரத்தால் தக்ஷிணதிக்கும் ஸர்வோத்தரமாயிற்று' என்றார். ஸ்ரீதீக்ஷிதரும் அவர்

பௌத்ரரும் மஹாகவியுமான ஸ்ரீநீலகண்டதீக்ஷிதரும் இதைப் பிடித்துக்கொண்டார்கள். வரதராஜஸ்தவத்தில் ஸ்ரீ தீக்ஷிதர் தக்ஷிணதேசத்திலுள்ள தேவப்பெருமாளை 'ஸர்வோத்தரோஸி' என்று சப்தவிரோதத்தைக் காட்டிப் பேசினார். சிவலீலார்ணவத்தில் 'அகஸ்த்யருடைய தக்ஷிண திக்கு ஸர்வோத்தரம்' என்று இப்படியே வர்ணிக்கப்பட்டது. "சாதகபக்ஷி மேகத்தை தன் தாஹம் தீர மூன்று நான்குசொட்டு ஜலம் யாசிக்கிறது; மேகம் உலகமெல்லாம் வெள்ளமிடும்படி மழை பொழிகிறது. இப்படியல்லவோ மஹான்களின் ஔதார்யம்" என்பர். (113)

𑌯𑍇𑌷𑌾𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌶𑌿𑌪𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌦𑌾𑌨𑌕𑌰𑌾𑌃 𑌕𑌰𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑍁𑌖𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑍌𑌰𑍁𑌷𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 ॥

யேஷாம் ஹிரண்யகசிபுக்ஷேத்ரதாநகரா: கரா: |
தேஷாம் திர்யங்முகத்வேऽபி புருஷத்வம் ந ஹீயதே || (114)

(ப-ரை) 𑌯𑍇𑌷𑌾𑌂 [யேஷாம்] - எவர்களுடைய, 𑌕𑌰𑌾𑌃 [கர:] - கையானது, 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌶𑌿𑌪𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌦𑌾𑌨𑌕𑌰𑌾𑌃 [ஹிரண்யகசிபுக்ஷேத்ரதாநகர:] - ஸ்வர்ணம், அந்நவஸ்த்ரம், பூமி இவற்றைத் தானம் செய்கிறதோ, (ஹிரண்யகசிபு என்னும் அஸுரனுடைய உடலைக் கிழிப்பதோ,) 𑌤𑍇𑌷𑌾𑌂 [தேஷாம்] - அவர்களுக்கு, 𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑍁𑌖𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 [திர்யங்முகத்வேழபி] - (ஒரு காலத்தில் முகத்தைத் திருப்பினாலும்), ஜந்துவின் முகமிருந்தாலும், (ஸிம்ஹத்தின் முகமிருந்தாலும்,) 𑌪𑍌𑌰𑍁𑌷𑌤𑍍𑌵𑌂 [புருஷத்வம்] - புருஷத்தன்மை, (ஏராளமாகக் கொடுக்கும் தன்மை,) (நரத்தன்மை), 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 [ந ஹீயதே] - இல்லாமல் போகாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ந்ருஸிம்ஹத்ருஷ்டாந்தத்தை ச்லேஷையாக உதாரபுருஷருக்கும் பொருத்துகிறார். நரஸிம்ஹன் திருமேனியில் நரத்வமும், ஸிம்ஹத்வமும் எப்படி அத்யந்தம் ஸுச்லிஷ்டமாக அமைந்ததோ, அப்படியே இந்தப் பெருமாளை த்ருஷ்டாந்தமாகக் காட்டும் இந்தக் கவிஸிம்ஹச்லோகத்தில் ச்லேஷை அத்யந்தம் ஸுச்லிஷ்டமாக அமைகிறது. 'தானம்' என்பதற்குக் கொடுக்கிறது—என்றும், கிழிக்கிறது—வெட்டுகிறது—என்றும் பொருள். க்ஷேத்ரம்-என்பதற்கு உடம்பு என்றும், பூமி என்றும் பொருள். ஹிரண்யகசிபு என்பது அஸுரன் பெயர். கசிபு–என்பதற்கு அன்னவஸ்த்ரம் என்றும், கட்டில் என்றும் பொருள். அஸுரன் தங்கக் கட்டிலில் சயனிப்பவன்; தங்கத்திலேயே புரளுகிறவன். ஸ்வர்ணம், அன்னவஸ்த்ரம், பூமி இதையெல்லாம் தானம் செய்வது உதாரபுருஷருடைய கை. ஹிரண்யகசிபுவின்க்ஷேத்ரமெனும் உடலத்தைக்கிழிப்பதுந்ருஸிம்மனுடைய திருக்கை. உதாரராயிருப்பவர், ஒருகால் முகத்தைத் திருப்பிக்கொண்டாலும், (திர்யங்முகரானாலும்) அவர்களுக்குப் 'புருஷத்வம்' (யதேஷ்டமாக வழங்கும் ஸ்வபாவம்) குறைந்து போய்விடாது. மற்றொரு ஸமயம் போனால் கொடுக்கவே கொடுப்பார். ஆள்விட்டழைத்தும் நிரம்பக்கொடுப்பர். 'புரு ஸனோதி' 'ஏராளமாய்க் கொடுக்கிறார்' என்று புருஷசப்தத்திற்குப் பட்டர் முதலிய பெரியோர் காட்டிய ஓர் வ்யுத்பத்தி. அதை இங்கே கொள்ளவேணும். ந்ருஸிம்மன் திர்யங்முகராயினும், சிங்கமுகராயினும், அவருக்கு நரத்வம் (புருஷத்வம்) இல்லாமற்போகவில்லை. ந்ருஸிம்மனைப்போல உதாரமாக வழங்குவாரில்லை. அத்யந்த கோபத்துடன் மஹாபீஷணமான ரூபாதிகளுடன் மஹாபலிஷ்டனான சத்ருவோடு யுத்தம் செய்துகொண்டேயிருக்கையில், அதே காலத்தில் ப்ரஹ்லாதக் குழந்தையை அத்யந்தம் வாத்ஸல்யம் நிரம்பிய திருக்கண்களால், குளிரக் கடாக்ஷித்துக்கொண்டு அவனுக்குப்ரக்ருஷ்டமான ஆஹ்லாதத்தை உண்டாக்கி அவன் ப்ரஹ்லாதப் பெயரை யதார்த்தமாக்கினார். கோபத்தின் காஷ்டை, ஸ்நேஹத்தின் காஷ்டையாகிய இரண்டுவிருத்தங்களையும்சேர்த்து கடனை பண்ணின அத்புத அழகில் ஸ்ரீதேசிகன் தயாசதகத்தில் அத்புதமாக ஈடுபட்டார். அதற்கடி 'சிற்றத்தோடு அருள் பெற்றவன்' என்று ஸ்ரீசடகோபனுடைய அநுபவம். வழக்கமாய்க் கொடுக்கும் உதாரன் ஒருநாள் முகத்தைத் திருப்பிக்கொண்டானேயென்று அவனிடம் மறுபடி போகாமலிருக்கக் கூடாது. பகவான்தான் புருஷர்; ஸிம்ஹரூபமெடுத்தவர் புருஷரே. அவனது புருஷத்தன்மை குறையாது.



𑌮𑍁𑌖𑍍𑌯𑌦𑌾𑌨𑍈𑌕𑌕𑍍𑌲𑌿𑌨𑍍𑌨𑌕𑌰𑌃 𑌖𑍍𑌯𑌾𑌤𑌕𑍍𑌷𑌮𑌾𑌧𑍃𑌤𑌿𑌃 ।
𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌨𑌾𑌶𑌾𑌵𑌾𑌰𑌣𑌃 𑌕𑌥𑌮𑍍 ॥ ௧௧௫ ॥

முக்யதாநைகக்லிந்நகர: க்யாதக்ஷமாத்ருதி: |
லோகபாலாச்ரித: கச்சிதஞசாவாரண: கதம் || (115)

(ப-ரை) 𑌮𑍁𑌖𑍍𑌯𑌦𑌾𑌨𑍈𑌕𑌕𑍍𑌲𑌿𑌨𑍍𑌨𑌕𑌰𑌃 [முக்யதானைகக்லின்னகர:]-முக்யமான உயர்ந்த பொருள்களைத் தானம்செய்து

தாரைவார்க்கும் ஜலத்தால் ஈரமான கையையுடைய புருஷனுடைய, (பெருமாளுடைய) முகத்திலிருந்துண்டான முக்கிய (முதல்) வர்ணத்தாருக்குத் தானம் பண்ணுவதால் ஈரமாயிருக்கும் கையுடைய, (முகத்திலிருந்து பெருகும் மதஜலத்தால் நனைந்து ஈரமான தும்பிக்கையை உடைய,) 𑌖𑍍𑌯𑌾𑌤𑌕𑍍𑌷𑌮𑌾𑌧𑍃𑌤𑌿𑌃 [க்யாதக்ஷமாத்ருதி:] - உலகப்ரஸித்தமான க்ஷமாதைர்யங்களை உடைய, (பூமியைத் தாங்கும் புகழை உடைய,) 𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 [லோகபாலாச்ரித:] - உலகத்தைக் காக்கும் ராஜாவை ஆச்ரயித்த மந்த்ரி முதலிய அதிகாரியான, (இந்த்ரனெனும் லோகபாலனால் வாஹனமாகச் செய்யப்பட்ட,) 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [கச்சித்] - ஒருவர், 𑌕𑌥𑌂 [கதம்] - எப்படி, 𑌅𑌨𑌾𑌶𑌾𑌵𑌾𑌰𑌣𑌃 [அனாசா வாரண:] - ஆசையைத் தீர்க்காதவராயிருப்பர். (திக்கஜமல்லாதவராவார்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— முன் ச்லோகத்தில் புருஷஸூக்தம் ஓதும் புருஷன் ப்ரஸ்தாவம் வந்தது. புருஷனுடைய முகத்திலிருந்துண்டான முக்கிய வர்ணத்தாருக்குத் தானங்கள் செய்வர் உதாரர். தானம் வாங்குவதில் அவர்களுக்கு அதிகாரம். 'முகத்தில் உண்டானவர் முக்யர்' என்று ச்ருதி வேடிக்கையாக ஓதியது. தானங்களில் முக்யம்— இராசில் புருஷனையே தங்கத்தோடு நிறுத்தி அத்தனை இடைத் தங்கத்தைத் தானம் செய்வது. முன் ச்லோகத்தில்போல இங்கும், ஹிரண்ய தானம். அங்கே ந்ருஸிம்மனுக்கு ரத்தக்கை. இங்கே இருவருக்கும் ஈரக்கை. திக்கஜங்கள் பூமியைத் தாங்குபவை. பெரிய ராஜாவை ஆச்ரயித்திருப்பர் சிற்றரசர், மந்த்ரிகள். ஐராவத திக்கஜம் இந்த்ரனால் வாஹனமாக ஆச்ரயிக்கப்படுவது. இப்படியெல்லாம் இருப்பது திக்கஜந்தான். வேறு ஒன்றுமிப்படி யிராது. இப்படியிருக்கும் உதாரன் ஆசையைத் தீர்க்காமலிருக்கமாட்டார். ஆசைப்படுவதையெல்லாம் தந்து, அனுபவிக்கச் செய்தால்தான் ஆசை தீரும்; ஆசை விலகும். போகத்தால்தான் ஆசை தீரும்.

𑌕𑍍𑌷𑍋𑌭𑌿𑌤𑍋 𑌵𑌿𑌬𑍁𑌧𑍈𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌗𑌂𑌭𑍀𑌰𑌮𑌧𑍁𑌰𑌾𑌶𑌯𑌃 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌗𑌜𑌾𑌶𑍍𑌵𑌾𑌦𑌿 (𑌗𑌵𑌾𑌶𑍍𑌵𑌾𑌦𑌿) 𑌸𑌹𑌿𑌤𑌾𑌂 𑌦𑌿𑌶𑌤𑌿 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 ॥

க்ஷோபிதோ விபுதை: கச்சித் கம்பீரமதுராசய: ।
சந்த்ரரத்நகஜாச்வாதி (கவாச்வாதி) ஸஹிதாம் திசதி ச்ரியம் ॥



(ப-ரை) 𑌵𑌿𑌬𑍁𑌧𑍈𑌃 [விபுதை:] - சிறந்த வித்வான்களால் (தேவர்களால்), 𑌕𑍍𑌷𑍋𑌭𑌿𑌤𑌃 [க்ஷோபித:] - ஸந்தோஷபரவசராக்கப்பட்ட (கடைந்து கலக்கப்பட்ட), 𑌗𑌂𑌭𑍀𑌰𑌮𑌧𑍁𑌰𑌾𑌶𑌯𑌃 [கம்பீரமதுராசய:] - கம்பீரமும் இனியதுமான மனத்தையுடைய (ஆழமும் இனிப்புமான பாற்கடலெனும்), 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [கச்சித்] - ஒருவர், 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌗𑌜𑌾𑌶𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑌹𑌿𑌤𑌾𑌂 [சந்த்ரரத்நகஜாச்வாதிஸஹிதாம்]- ஸ்வர்ணம் ரத்நம் யானைமுதலியவைகளோடு கூடிய(சந்த்ரன் ஐராவதயானை உச்சைச்ரவஸ் குதிரை முதலியதோடு கூடிய), 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 [ச்ரியம்] - தனத்தை (லக்ஷ்மியை), 𑌦𑌿𑌶𑌤𑌿 [திசதி] - கொடுக்கிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- முன் ஐராவதமென்னும் திக்கஜம் மதஜலதானம் செய்வதைப் பேசினர். இங்கே ஐராவதத்தையே பாற்கடல்தானம் செய்வதைப் பேசுகிறார். தனதான்யங்களை வழங்கும் உதாரரைப் பாற்கடலுக்கு ஒப்பிடுகிறார். பால் போன்ற மனமுடையவர், க்ஷீரஹ்ருதயர் வித்வான்களுடைய ஸரஸஸல்லாபங்களால் ஹர்ஷபாரவச்யமடைவர். ஹர்ஷமும் மனதிற்கு ஓர் க்ஷோபமே. 'சந்த்ரன்' என்பது ஸ்வர்ணத்தையும் சந்த்ரனையும் சொல்லும். விபுதர்-என்பது வித்வான்களையும் தேவரையும் சொல்லும். உதாரர் வித்வான்களுக்கு ஸ்வர்ணம் ரத்நம் கஜம் அச்வம் முதலியதோடு கூடிய செலவதனையளிப்பர். பாற்கடல் சந்த்ரன் கௌஸ்துபரத்நம் ஐராவதம் உச்சைச்ரவஸு முதலியதோடு கூடிய லக்ஷ்மியைக் கொடுத்தது. தேவர்களும் அஸுரர்களும் சேர்ந்து கடைந்தாலும் தானம்பெற்றவர் தேவர்கள். ஆகையால் அஸுரர்களைக் குறிப்பிடவில்லை. ஏமாந்து போனவரைக் குறிப்பிடுவது உசிதமல்ல. அவர்கள் தானத்திற்குப்பாத்ரமல்ல; அபாத்ரத்திற்குக் கொடுத்தாலும் தோஷம். 'தேசம், பாத்ரம் காலமறிந்து கொடுப்பதுதான் தானமெனப்படும்'. சந்த்ரன் பரமோதாரன்; அந்த உதாரனையே பாற்கடல் தந்தது; உதாரனைத் தந்த ஔதார்யம். 'கவாச்வ' என்ற பாடம் மிக்க ரஸம். காமதேனுவையே தந்தது பாற்கடல். 'கஜாச்வ' என்பதும் ரஸம். யானை குதிரை முதலிய செல்வத்தைத் தருபவர். 'கௌஸ்துபரத்நத்தை' பாற்கடல் தந்தது. ஜீவரத்நமான தானெனும் கௌஸ்துபத்தை ஸமர்ப்பிக்கும். ஞானி உதாரஸார்வபௌமன். உயிரை ஸமர்ப்பிப்பவன் பெருமாளுக்கு உயிராகிறான். அவரால் உதாரனென முக்யமாகப் புகழப்படுகிறான்.

189913

𑌅𑌪𑍁𑌨𑌰𑍍𑌦𑍇𑌹𑌿 𑌸𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 (𑌰𑍍𑌹𑌂) 𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑍃𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑌮𑍍।
𑌅𑌰𑍍𑌥𑌿𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍॥

அபுநர்தேஹி சப்தார்த்தம் (ர்ஹம்) அப்ரத்யுபக்ருதிக்ஷமம் ।
அர்த்திநம் குருதே கச்சித் புநராவ்ருத்திவர்ஜிதம் ॥ (117)

(ப-ரை) 𑌅𑌪𑍁𑌨𑌰𑍍𑌦𑍇𑌹𑌿 𑌸𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌹𑌂 [அபுநர்தேஹி சப்தார்ஹம்] - இரண்டாம் தரம் கொடு என்று கேழ்க்கவேண்டாதவனையும் (மறுபடியும் 'சரீரமுடையவனைகப் பிறந்தான்' என்பதற்கு யோக்யமல்லாதவனையும்), 𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑍃𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑌂 [அப்ரத்யுபக்ருதிக்ஷமம்] - ப்ரத்யுபகாரம் பண்ணக்கூடாதவனையும், 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 [புநராவ்ருத்திவர்ஜிதம்]-இரண்டாந்தரம் வராதவனையும் (ஸம்ஸாரமண்டலத்திற்குத் திரும்பி வராதவனையும்), 𑌅𑌰𑍍𑌥𑌿𑌨𑌂 [அர்த்திநம்] - தன்னிடம் யாசிப்பவனை (ப்ரார்த்திப்பவனை), 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [கச்சித்] - யாரோ ஒரு அபூர்வ ப்ரபு, 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 [குருதே] - செய்கிறான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஓரஞ்ஜலிக்குக் கிங்கரனாகும் பரமோதாரனை பகவானையே உபமானமாகக் காட்டுகிறார். ஸ்வாமியான அவனுடைய சிலந்தையல்லவோ தாஸரான நாம் அநுகரணம் செய்யவேணும். பகவானை இரண்டாந்தரம் ப்ரார்த்தனை செய்யவேண்டியதேயில்லை. ஓர் ப்ரார்த்தனையாலேயே தம்மைப் பெருங்கடனாளியாக நினைக்கும் ப்ரபு. 'ருணம் ப்ரவ்ருத்தமிவ' என்று நினைப்பவர். ஒருதரம் முமுக்ஷுவாய்ச் சரணம் புகுந்தவன் மறுபடியும் 'தேஹீ' 'சரீரமெடுப்பவன்' என்ற பேச்சுக்கே இடங்கொடாதவனைச் செய்கிறார். ஒருகால் சரணம் புகுந்தவருக்கு ஜந்மாந்தரமில்லை. அவன் செய்யும் பேருதவிக்கு எது செய்யினும் தக்க கைம்மாறாகாது. நம்மால் என் செய்யவுளது என்று கைவாங்குவதல்லால் வேறில்லை. அவனுக்கு ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருவதில்லாமல் செய்கிறார். ஆசிரியர் விஷயத்திலும் இவை பொருந்தும். உதாரப்ரபு விஷயத்தில் 'புநர்ஜந்மமில்லை'யென்பதுதவிர மற்றது பொருந்தும். யாசகன் திரும்பி இன்னொருதரம் யாசிக்கத்தேவையில்லை. முதல் தரம் கொடுத்ததே பல தலைமுறைகளுச்சுப் போதும். இரண்டாந்தரம் 'தேஹி' என்று ப்ரார்த்திக்கவேண்டியதில்லை. 'குருதே' என்று ஆத்மநேபதப்ரயோகமுமுரு. யாசகன் பெற்ற பலங்களைத் தன் பேருக நினைக்கும் ப்ரபு. யாசகனைத் தனக்கு ஔதார்யகுணமறிறம் பெறும் மஹாஸந்தோஷத்தை வழங்கினவள்ளல் (உதாரன்) என்று புகழும் உத்தமபுருஷன். (117)

ஸ்ரீ:

உத்திரவாதமான

வைரங்கள் முதலிய ரத்தினங்களால் செய்த பொன், வெள்ளி நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், பெங்களூர், சேலம், மதுரை, காசி முதலிய பல ஊர் பட்டு, ஜவுளி தினுசுகளும் இங்கு கிடைக்கும்

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

V. ராமய்யங்கார்,
கவர்னிங் டைரக்டர்,

ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்,
109, சைனுபஜார் ரோட்,
பைராகிமடம் கோவில் சமீபம்,
மதராஸ்

நேமம் ப்ரம்மஸாயுஜ்ய புஸ்தகாலய ப்ரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மோக்ஷ வழி (கீதை உபநிஷத் ப்ரமாணம்) ... | 1 | 0 | 0 |
| 2. | ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி (கிரந்த எழுத்தில்) ... | 4 | 0 | 0 |
| 3. | அமர ஸங்க்ரஹம் சுலோக வ்யுத்பத்தி அர்த்தத்துடன் ... | 1 | 5 | 0 |
| 4. | தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி ... | 1 | 4 | 0 |
| 5. | ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி ... | 2 | 8 | 0 |

6 ரூபாய்க்குக் குறையாத ஆர்டருக்கு 25% கமிஷன் தனிப்ரதிக்கும் சந்தாதாரர்களுக்கும் 20% கமிஷன் கொடுக்கப்படும்,

விலாஸம்:— நெ.ஈ. துரைசாமி அய்யங்கார்,
ஸம்ஸ்கிருத புஸ்தக வியாபாரம்,
24, ஸ்டேஷன் ரோட், வில்லிவாக்கம்,
மதராஸ்

**Registered No. M. 3343**




## கூந்தல் தைலம்

ஆயுர்வேத முறைப்படி
வெகுநாள் உழைத்து
கண்டுபிடித்தது

தலை சுற்றல், மூளை மந்தம், கண் எரிச்சல், தலை நோய் முதலியவைகளை எளிதில் கண்டிக்கும்.

ஸ்திரீகளின் வரப்ரசாதினி. தலைமயிரை வளரச் செய்வதோடு பளபளப்பையும், மிருது தன்மையையும் கொடுக்கும்.

எஸ். விஸ்வநாதம் கம்பெனி, பந்தர்தெரு, மதராஸ்.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

# "ABALA-KALPAM"

**The Best Uterine and Haematinic Tonic and. An Excellent Alterative in Long standing Cases of**
MENORRHAGIA AND LEUCORRHŒA IN WOMEN.

**Preparation:-** An Ideal Extract in syrup form with a sweet taste and containing the essence, besides other drugs, barks and roots, of Asoka bark originally used very successfully by the great physician of yore, CHAKRADATTA, in all cases of uterine affections and specially in Menorrhagia.

**Action and Uses:-** Particularly indicated in Menorrhagia of young women establishing the menstrual functions and improving the tone of nervous system. **Highly efficatious in all case. of menstrual disorders, profuse and painful menstruations spasmodic pain in uterus, ovarine organs, abdomen and loins, uterine hæmorhagc, giddiness of head, exessive thirst during, Menstual periods, constant abortion or miscarriage, etc.** Readily alleviates Leucorrhœa and removes debility, anæmia, resulting from profuse Menstruation, weakness after confinement, etc

**Dose:-** Half to one teaspoonful twice a day before meals diluted with or followed by 1 to 2 oz. of warm cow's milk. No Diet Restriction. **Price:-** One bottle of 12 oz. -- 2 - 8 - 0

289 ESPLANADE. MADRAS. P. O. BOX 151

Printer. M.K. Parthasarathi Iyengar, Sri Komalamba Press, Kumbakonam
Edited and Published at Srirangam by A V. Gopalachariar.
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.